Regsitered at the G. P. O. as a Newspaper

விலை சதம் 10

# ஈழநாடு

EELA NADU

போன்: 389 National TAMIL DAILY தேசிய தினசரி தபாற் பெட்டி எண்: 43

மலர் 3 யாழ்ப்பாணம். பிலவ ஐப்பசி 14 ஆம் நாள் ஜ. அவ்வல் 19 (30-10-61) திங்கட்கிழமை இதழ் 221

நீங்கள் அணியும் ஆடைகள்
தூய வெண்மையாகத் திகழவேண்டுமானால்
இன்றே!
டொலர் அடையாளமிட்ட
நீலம் வாங்கி உபயோகியுங்கள்
விநியோகஸ்தர்கள்:
டொலர் கோப்பரேஷன்
14,டாம் வீதி, கொழும்பு.

# "பொலிசாரிடமிருந்து பாதுகாப்பு தருக!"

## கேணல் உடுகமவிடம் தலைமைக்காரர் கோரிக்கை

### மானிப்பாய் விதானை தாக்கப்பட்டதன் எதிரொலி

யாழ்ப்பாணம், திங்கள்

**பொலிசாரிடமிருந்து கிராமத் தலைமைக்காரர்களுக்கு பாதுகாப்பளிக்க வேண்டுமென்று அகில இலங்கை கிராமத் தலைமைக்காரர் சங்கத்தின் யாழ்ப்பாண மாவட்டக்கிளை யாழ்ப்பாண மாவட்ட நிர்வாக இணைப்பு அதிகாரியும் அரசாங்க அதிபருமான லெப்டினன்ட் கேணல் உடுகமையைக் கேட்டுள்ளது.**

சமீபத்தில் மானிப்பாய் பகுதிக் கிராமத் தலைமைக்காரர் தாக்கப்பட்டது சம்பந்தமாக கிராமத் தலைமைக்காரர் சங்கத் தூதுகோஷ்டியொன்று கேணல் உடுகமையைச் சந்தித்து கிராமத் தலைமைக்காரர் தாக்கப்பட்டதுபற்றி கடுமையான ஆட்சேபனையைத் தெரிவித்துக் கொண்டது. அச்சம்பவம்பற்றி கேணல் உடுகமையே விசாரணை செய்யவேண்டுமென்றும் கேட்டுக் கொண்டது.

பாதுகாப்பு வெளிவிவகார அமைச்சின் நிரந்தரக் காரியதரிசியுடன் இதுபற்றித் தொடர்பு கொண்டு நியாயம் வழங்குவதற்கு ஆவன செய்வதாக கேணல் உடுகம வாக்குறுதியளித்தார்.

சென்ற வியாழக்கிழமை மானிப்பாய் கிராமத் தலைமைக்காரரை ஆனைக்கோட்டைப் பொலிசைச் சேர்ந்த பொலிசார் சிலர் தாக்கியதாகவும் அத்தலைமைக்காரரை அரைநிர்வாணமாக பொதுமக்கள் முன்னிலையில் நீதிமன்றத்துக்கு எடுத்துச் சென்று அவமானப்படுத்தியதாகவும் யாழ்ப்பாண மாவட்ட நிர்வாக இணைப்பு அதிகாரி லெப்டினன்ட் கேணல் ஏ. ஆர். உடுகமையிடம் கிராமத் தலைமைக்காரர் சங்க யாழ்ப்பாண மாவட்டக் கிளையின் தூது கோஷ்டி தெரிவித்தது.

**உதவி இன்ஸ்பெக்டர் பழிவாங்கினார்**

மானிப்பாய் கிராமத் தலைமைக்காரரிடம் ஆனைக்கோட்டைப் பொலிஸ் நிலையத்துக்குப் பொறுப்பான உதவி இன்ஸ்பெக்டருக்குத் தனிப்பட்ட முறையில் கோபதாபங்களுண்டு என்றும் இப்பொழுது அவர் பழிதீர்த்துக் கொண்டாரென்றும் தூதுகோஷ்டியினர் கேணல் உடுகமவிடம் கூறினர்.

'லைசன்ஸ்' இல்லாத துப்பாக்கியொன்று வைத்திருப்பதாகக் குற்றம் சாட்டி சோதனை போடுவதற்காகக் கிராமத் தலைமைக்காரரின் வீட்டுக்கு எட்டு பொலிஸ்காரர்கள் சென்றதாகவும், தலைமைக்காரரின் வீட்டிலிருந்த பெண்களைத் தூஷித்ததுடன் அவர்களைத் தாக்கியதாகவும் தலைமைக்காரர் தூது கோஷ்டி கேணல் உடுகமவிடம் குற்றம் சாட்டியது.

**பாதுகாப்பு அளிக்க வேண்டும்**

கிராமத் தலைமைக்காரர்களுக்கு பாதுகாப்பளிக்கப்படாவிட்டால் இதர தலைமைக்காரர்களும் பொலிஸாரினால் தாக்கப்படக் கூடுமென்று தாங்கள் அஞ்சுவதாகவும் அவர்கள் தெரிவித்தனர். கிராமத் தலைமைக்காரர் முறை ஒழிக்கப்படவிருக்கும் இச்சமயத்தில், சிரேஷ்ட கிராமத் தலைமைக்காரர் ஒருவருக்கு ஏற்பட்ட அவமரியாதை, பொலிஸ் படையைச் சேர்ந்தவர்கள் கிராமத் தலைமைக்காரர்மீது தாக்குதல் நடத்தும் தொற்றுநோயின் ஆரம்பம் எனத் தாங்கள் கருதுவதாகவும் அவர்கள் தெரிவித்தனர். இந்த நிலையில் தாங்கள் தங்கள் கடமைகளைச் செய்ய முடியாதென்றும் அவர்கள் கூறினர்.

**உறுதியளிக்க வேண்டும்**

இதுபோன்ற சம்பவம் மீண்டும் நிகழமாட்டாதென பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரல் வாக்குறுதியளிக்காவிட்டால் யாழ்ப்பாணத்தில் எந்தப் பகுதியிலும் பொலிசாருக்கு தங்கள் ஒத்துழைப்பைத் தொடர்ந்து அளிக்கமுடியாதென்றும் கிராமத் தலைமைக்காரர் தெரிவித்தனர்.

சிரேஷ்ட பொலிஸ் அதிகாரிகள் மீது தங்களுக்கு நம்பிக்கையில்லையென்றும் இச் சம்பவம் பற்றி கேணல் உடுகமையே பாரபட்சமற்ற விசாரணை நடத்தவேண்டுமென்றும் அவர்கள் கேட்டுக்கொண்டனர்.

பாதுகாப்பு வெளிவிவகார அமைச்சின் நிரந்தரக் காரியதரிசியுடன் தொடர்புகொண்டு நியாயம் கிடைக்க ஆவன செய்வதாக கேணல் உறுதிமொழியளித்தார்.

## பிரதமரின் காரியாலயம் மேல்மாடிக்கு மாற்றம்

கொழும்பு, ஞாயிறு

பிரதமரின் காரியாலயமும் பாதுகாப்பு வெளிவிவகார அமைச்சின் காரியாலயமும் அரசாங்கக் காரியாலயக் கட்டடத்திலுள்ள முதல்மாடிக்கு மாற்றம் செய்யப்பட இருக்கின்றன.

இலங்கை சுதந்திரமடைந்த பின்னர் இப்பொழுதுதான் முதன் முறையாக இக்காரியாலயங்களை இடமாற்றம் செய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

சென்ற வாரம் நிதி அமைச்சில் நடைபெற்ற தொடர்பான மகாநாடுகளின் பின்னரே இவ்வித நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதுவரை அரசாங்கசேவை கமிஷனும் தொழில் அமைச்சும் இருந்து வந்த மாடியில் பிரதமரும் பாதுகாப்பு வெளிவிவகார அமைச்சும் வரவிருப்பதால் இவர்கள் செனட் லீக்குயருக்கு தமது காரியாலங்களை மாற்றிக்கொள்வார்கள்.

இவ்வித இடமாற்றத்தினால் நிதிமந்திரியும் பிரதமரின் பார்லிமெண்டரிக் காரியதரிசியுமான திரு. பீலிக்ஸ் ஆர். டயஸ் பண்டாரநாயகா தமது அலுவல்களைக் கவனிக்க இலகுவாக இருக்குமெனத் தெரிகிறது.

ஹேமாஸ் கட்டடத்திலுள்ள பாதுகாப்பு அமைச்சின் பிரஜாவுரிமைப் பகுதியும் அரசாங்கக் காரியாலயக் கட்டடத்துக்கு மாற்றம் செய்யப்படும் எனத் தெரிகிறது.

## மந்திரி இலங்கரத்ன கொழும்பு திரும்பினார்

### தமது வர்த்தகத் தூது வெற்றியளித்துள்ளதாக அறிவிப்பு

கொழும்பு, ஞாயிறு

வர்த்தகப் பேச்சுவார்த்தைகள் நடத்துவதற்காக இந்தியா சென்றிருந்த வர்த்தக மந்திரி திரு. டி. பி. இலங்கரத்ன, இன்று கொழும்பு திரும்பினார். இலங்கை இந்திய வர்த்தகம் இதுவரை இந்தியாவுக்கே சாதகமாய் இருந்ததாயும், இலங்கைப் பொருட்களை அதிகம் வாங்குமாறும், இறக்குமதிக் கட்டுப்பாட்டைத் தளர்த்துமாறும் இந்தியாவை வற்புறுத்தத்தே தாம் சென்றதாயும் தமது முயற்சி வெற்றியளித்துள்ளதாயும் மந்திரி கூறினார்.

—

## நகரசபைகள் மகாநாடு முடிவு

கொழும்பு, ஞாயிறு

பண்டாரவளையில் நடைபெற்ற நகரசபைகளின் 24-து வருடாந்த மகாநாடு இன்று மாலை முடிவடைந்தது.

## செனட்டில் எதிர்க்கட்சித் தலைவர் யார்?

கொழும்பு, ஞாயிறு

செனட்டில் எதிர்க்கட்சித் தலைவராக யார் நியமிக்கப்படலாம் என்ற கேள்வி இப்பொழுது எழுந்துள்ளது.

சமஷ்டிக்கட்சியைச் சேர்ந்த இரு செனட்டர்களும் எல். எஸ். எஸ். பி. யைச் சேர்ந்த இரு செனட்டர்களும் இப்பொழுது செனட்டில் அங்கத்துவம் வகிக்கின்றார்கள்.

எல். எஸ். எஸ். பி. யைச் சேர்ந்த டொக்டர் டி' சூசாவே செனட்டில் எதிர்க்கட்சித் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்படலாம் என அரசியல் வட்டாரங்கள் கருதுகின்றன.

## 'டிசம்பருக்கு முன் போர்த்துக்கலுக்கு விடுதலை!'

### சலஸார் வீழ்த்தப்படுவார் என்கிறார் காப்டன் கல்வாஸ்

லண்டன், அக். 29

வருகிற கிறிஸ்துமஸுக்கு முன்பே போர்த்துக்கலை டாக்டர் சலஸாரின் சர்வாதிகாரப் பிடியிலிருந்து விடுவிக்கப் போவதாய் நார்வே மாணவர்கள் கூட்டமொன்றில் பேசிய காப்டன் கல்வாஸ் கூறினார். விடுதலை இயக்க ஏற்பாடுகள் பூர்த்தியாகி விட்டதாயும், சலஸாரின் வீழ்ச்சி சமீபித்துவிட்டதென்றும் அவர் கூறினார். காப்டன் கல்வாஸ், "சாந்தா மரியா" என்ற போர்த்துக்கல் கப்பலை நடுக்கடலில் கைப்பற்றி பரபரப்பை உண்டு பண்ணியவர் என்பது குறிப்பிடத்தக்கது.

## சென். ஜோன்ஸ் அம்புலன்ஸ் வருடாந்த பொதுக்கூட்டம்

### முதலுதவி பயிற்சி பற்றி வற்புறுத்து

யாழ்ப்பாணம, ஞாயிறு

சென்ட் ஜோன்ஸ் அம்புலன்ஸ் யாழ்ப்பாணக்கிளையின் வருடாந்தப் பொதுக் கூட்டம் யாழ். நகரசபை மண்டபத்தில் கடந்த 27ம் திகதி நடைபெற்றது. யாழ்ப்பாண மாவட்ட நிர்வாக இணைப்பு அதிகாரி கேர்ணல் ஏ. ஆர். உடுகமவின் தலைமையில் நடைபெற்ற கூட்டம் காலஞ் சென்ற ஓ. ஐ. சி. திரு. எஸ். குமாரசாமிக்கும், காலஞ்சென்ற முதலியார் அத்தியார் அருணசலத்திற்கும் மரியாதை செலுத்துமுகமாக இரு நிமிட மௌனத்துடன் ஆரம்பமாகியது.

வடமாகாணக் கமிஷனரும், சென்ட் ஜோன்ஸ் அம்புலன்ஸ் யாழ்ப்பாணக் கிளையின் கௌரவ காரியதரிசியுமான திரு. சி. டபிள்யூ. டி. அல்வினஸ் 1960ம் ஆண்டு அறிக்கையைச் சமர்ப்பித்தார்.

முதலுதவி, நோயாளர் பராமரிப்பு ஆகியவற்றில் மிகச் சில வகுப்புக்களே நடாத்தப்பட்டு வருகின்றன என அவர் குறிப்பிட்டார். நிதிக் கஷ்டத்தினால் வகுப்புக்கள் அதிகம் நடாத்தப்படவில்லை எனவும் முதலுதவிப் பயிற்சியளிப்பதற்கு போதிய தராதரமுடையவர்கள் தேவைப்படுகின்றனர் எனவும் அவர் குறிப்பிட்டார். மேலும் அவர் கூறியதாவது:

இலங்கை முழுவதிலும் 100,000 பேர்கள் முதலுதவி கற்றிருக்கவேண்டும். ஆனல் இப்போது 10,000 பேர் மட்டும் தான் இருக்கிறார்கள். தன்னலமற்றசேவையினலேயே இக் குறையைத் தீர்க்கலாம்".

சங்கத்தின் முயற்சிகளில் அதிக ஈடுபாடும் கவனமும் செலுத்துமாறு கேர்ணல் உடுகம வாலிபர்களையும் இளம் பெண்களையும் கேட்டுக்கொண்டார்.

திரு. சி. டபிள்யூ. டி. அல்வினஸ் சங்கத்துக்காக தீவிரமாக உழைத்து வருவதுபற்றி கேர்னல் உடுகம பாராட்டினார்.

## உங்கள் நோய்

குணப்படுத்த உத்தரவாதம் நீரிழிவுக்கு 15 நாள் மருந்து ரூ. 15-50. தொய்வுக்கு 10 நாள் மருந்து ரூ. 12-50. பல வியாதிகளுக்கும் நற்சாட்சிப் பத்திரங்களடங்கிய கற்றலோக் (Catalogue) இனம்.

வைத்தியர் பரிபூரணநந்தர், கைலாசபிள்ளையார் கோவிலடி, யாழ்ப்பாணம்.

---

தந்தி: றைக்கிளீன்.
போன்: 474.

### சன்லையிட் டையேஸ் அன் றைக்கிளீனஸ்

பட்டு உடைகளை றைக்கிளீன் செய்வதிலும் சாயம் போடுவதிலும் கேட்கும் நேரங்களில் தவணை தவறுதுகொடுப்பதிலும் விருப்பம் போல் பார்சல் மூலம் அனுப்புவதிலும் வடமாகாணத்தில் மிகப்பெரிய ஸ்தாபனம் சன்லையிட்டையேஸ் அன் றைக்கிளீன்ஸ், பஸ் நிலையத்துக்கு முன்பாக, பெரிய கடை, யாழ்ப்பாணம்.

---

## சிவானந்த குருகுலம் திருக்கேதீச்சரம்

**வேதாகம பாடசாலையும் உயர்தரக் கல்லூரியும்**

ஆரம்பம் ஐப்பசி மாதம் 24ந் திகதி வியாழக்கிழமை. (9-11-61)சேரவிரும்பும் மாணுக்கர் பின்வரும் விலாசத்துக்கு விண்ணப்பஞ் செய்யவும்.

முகாமைக்காரர்,
சிவானந்த குருகுலம்
திருக்கேதீச்சரம்,
மன்னார்.


## உங்களுக்கு ஓர் அரிய சந்தர்ப்பம்!

தீபாவளிக்குத் தேவையான ஜவுளிகளை இப்பொழுதே வாங்குங்கள்

இன்னும் 6 நாட்கள் மாத்திரமே விற்பனை நடைபெறும். அதன் பின்னர் நீடிக்கப்பட மாட்டாது.

இதுவரை என்றுமேஇவ்வித விலைக்குறைப்பு செய்யப்படவில்லை.

ரூ. 25-க்கு மேற்பட்டஜவுளிகளை வாங்குபவர்களுக்கு இலவச பரிசு கிடைக்கும்.

**டொலறம்ஸ்**
**46, மெயின் வீதி, யாழ்ப்பாணம்.**


# அச்சுவேலி கொலைவழக்கில் மேலும் மூவர் சரண்

மாவிட்டபுரம், சனி

அச்சுவேலியைச் சேர்ந்த சின்னத்தம்பி செல்லையா என்பவர் அடித்துக்கொலைசெய்யப்பட்டதைத் தொடர்ந்து காங்கேசன்துறைப் பொலிசாரால் மல்லாகம் நீதிமன்றத்தில் தொடரப்பட்ட வழக்கில் மேலும் மூன்று சந்தேக நபர்களான செல்லர் சிவசுப்பிரமணியம், சின்னத்தம்பி வேலுப்பிள்ளை, இளையதம்பி கந்தசாமி ஆகியோர் நீதிபதி முன்னிலையில் சரணடைந்தனர்.

இவ் வழக்கில் அச்சுவேலியைச் சேர்ந்த இளையதம்பி சின்னத்தம்பி, சின்னத்தம்பி தவராஜா, சின்னத்தம்பி சபாபதி, ஆறுமுகம் சுப்பையா, சுப்பையா கனகரத்தினம், செல்லர் சிவசுப்பிரமணியம், சின்னத்தம்பி வேலுப்பிள்ளை, இளையதம்பி கந்தசாமி ஆகிய எட்டு நபர்களும் அச்சுவேலியைச் சேர்ந்த சின்னத்தம்பி செல்லையா என்பவரை அடித்துக் கொலை செய்ததாகக் குற்றஞ் சாட்டப்பட்டுள்ளனர்.

மேற் கூறிய எட்டுஎதிரிகளையும் நவம்பர் மாதம் 2-ம்திகதி வரை விளக்கமறியலில் வைக்கும்படி உத்தரவிட்டு வழக்கை 2-11-61 க்கு நீதிபதி திரு. வெஸ்லி. டி. தாமோதரம் ஒத்திவைத்தார்.

எதிரிகள் தரப்பில் திரு. வி. செல்லத்துரையின் அனுசரணையுடன் திரு. ஆர். கண்ணத்துரை ஆஜரானுர்.

காங்கேசன்துறை பொலிஸ் தலைமை இன்ஸ்பெக்டர் திரு. ஏ. பிரிட்டோ வழக்கைத் தாக்கல் செய்திருந்தார்.

## கட்டுநாயக்கா பிரதான விமானநிலையமாகும்

கொழும்பு, வெள்ளி

கட்டுநாயக்காவை இலங்கையின் சர்வதேச விமானநிலையமாக்கி இரத்மலானை விமான நிலையத்திலும் பார்க்க அதற்கு முக்கியத்துவமளிக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளதாக போக்குவரத்து மராமத்து மந்திரி திரு. பி. பி. ஜி. கலுகல்ல தெரிவித்துள்ளார்.

கட்டுநாயக்கா விமான நிலையத்தை விருத்திசெய்வதற்கு வாய்ப்புக்கள் அதிகரித்திருப்பதாலேயே இவ்விதம் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக மந்திரி தெரிவித்தார்.

## சங்கரின் நம்பிக்கை!

சென்னை, அக். 29

கேரளத்தில் ஆட்சியிலுள்ள கலப்பு அரசாங்கம் இந்த பதவிக்காலம் முடிவடையும்வரை ஆள்சியிலுருக்குமெனத் தாம் நம்புவதாக கேரள துணைப் பிரதமர் திரு. சங்கர் நேற்று இங்கு தெரிவித்தார்.

## இந்தியா தயாரித்த விமானம்

புதுடில்லி, அக். 27

இந்திய விமானப்படையைச் சேர்ந்த விமானத் தயாரிப்புத் தொழிற்சாலையில் திட்டமிட்டு இந்திய தொழில்நுட்ப நிபுணர்களால் தயாரிக்கப்பட்ட 'கான்பூர்லே' என்ற விமானம் வெற்றிகரமாகப் பறக்கவிடப்பட்டது.

## டாங்கிகள் வாபஸ்!

பொன், அக். 29

பெர்லின் எல்லையில் தயாராக நின்ற சோவியத் அமெரிக்க டாங்கிகள் அங்கிருந்து வாபஸ் பெறப்பட்டுள்ளன. இதனுல் அங்கு தோன்றியிருந்த ஆபத்தான நிலைமை நீங்கியுள்ளது.

கிழக்கு பெர்லின் எல்லைக்குள் அமெரிக்க ஹெலிகொப்டர் விமானங்கள் பறந்ததற்கு ஆட்சேபம் தெரிவித்துக் கிழக்கு பெர்லினிலுள்ள சோவியத் தளபதி மேற்கு பேர்லினிலுள்ள அமெரிக்கத் தளபதிக்கு இரண்டு குறிப்புகள் அனுப்பியுள்ளார்.

## நமது நூல் நிலையம்

**கந்தபுராண போதனை:** ஆசிரியர்: பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை.

வெளியீடு: சைவ இளைஞர் மத்திய மகாசபை, தெல்லிப்பழை, யாழ்ப்பாணம்.

விலை ரூ. 1-25.

"இந்நாட்டுக்கு வந்த வருகின்ற இடையூறுகளினின்றும், சைவத்தையும் தமிழையும் பாதுகாத்து வைத்தது, வைக்கின்றது கந்தபுராணம்." அப்புராணத்தில் அடங்கியுள்ள கருப் பொருளைப் பண்டிதமணி அவர்கள், புராணத்தின் தூய்மைகெடாமல் தமக்கே உரித்தான நடையில் விளக்கஞ் செய்துள்ளார். சொற்பெருக்காற்றுவோரின் திறமைக் குறைவாலும் இலக்கியக்காரர்களின் புராண விமர்சனத்தாலும் இக்கால வாலிபர்கள், புராணங்களெல்லாம் கற்பனைப்புழுகுகளென்றும் இக்காலத்துக்கு வேண்டாதன என்றும் ஒதுக்கத் தலைப்பட்டுவிட்டனர். வெறுங் கதைகளைச் சொல்லி, பாடல்களுக்கு நயங் காட்டுகிறேம் என்ற போர்வையில் வேண்டாதனவற்றை விரித்து, நூலாசிரியரின் நோக்கத்தையும், நூல் எழுந்த நோக்கத்தையும் உணராமல் செய்யப்படும் விமர்சன முறைகளும் பல்கிப் பெருகிவிட்டன. இத்தகைய சூழ்நிலையில் கந்த புராணத்துக்கு பண்டித மணியின் இவ்வழி நூல் அருமையான திறவுகோலாகும். அறம்-தருமம்; அகச்சமயம்-புறச் சமயம்; களவு-கற்பு என்பவற்றைப்பற்றி இவ்வளவு காலமும் எண்ணியிருந்த எண்ணங்களுக்கு இந்நூல் ஒரு புதுத் திருப்பத்தைக் கொடுத்துள்ளது. இதனைவெளியிட்ட சைவ இளைஞர் மத்திய மகாசபையாளர் பெருமைக்குரியர்களே.

ஃ ஃ ஃ

1. **சிந்தனையாளர் மாக்கியவெல்லி:** ஆசிரியர்: நாரா. நாச்சியப்பன்: விலை ரூ. 2

2. **சிந்தனையாளர் வால்டேர்:** ஆசிரியர்: கே. சாவித்திரி; விலை ரூ. 2. இந்நூல்களின் பதிப்பாசிரியர்: அரு. ராமநாதன்.

வெளியீடு: பிரேமா பிரசுரம். சென்னை 24.

1. நிலையான அரசியல் எப்படி இருக்க வேண்டுமென மேனுட்டில் சுமார் நான்கு நூற்றுண்டுகளுக்கு முன்னுலேயே சிந்தித்தவர் நிக்கோலோ மாக்கிய வெல்லி எனக் கூறினுல் அது மிகையாகாது. குடியரசு, முடியரசு எதுவாயினும்அது மக்களின் நன்மைக்கான அரசாக இருக்க வேண்டும் அத்துடன் அது நிலைத்து நிற்கவும் வேண்டுமென்பது மாக்கியவெல்லியின் கொள்கை. 'மாக்கிய வெல்லிசம் என்ருலே 'அரசியல் அயோக்கியத்தனம்' எனப் பொருள் கொள்வாருமுளர். எனினும் பதினைந்தாம் நூற்றுண்டில் இத்தாலியில் தோன்றிய இந்த அறிஞரை இன்று உலகம் போற்றுகின்றது. இப் பெரியாரின் வரலாறு உட்பட அவர் எழுதிய நூல்களைப் பற்றிச் சுருக்கமாக ஆசிரியர் இந்நூலில் தந்துள்ளார்.

2. பிரெஞ்சு நாட்டில்புரட்சி ஏற்படவும், மதச் சீர்திருத்தம் உண்டாகவும் உதவியுள்ளவர்களில் ஒருவர் வால்டேர். பதினெட்டாவது நூற்றுண்டை வால்டேரின் யுகம் எனக் கூறுவதில் எவ்வளவோ உண்மை இருக்கின்றது. அக்காலத்தைப் பிரதிபலிக்கும் உள்ளமாக வால்டேர் விளங்கினுர். அவருடைய அறிவுச் செல்வம் வற்ருத ஊற்ருகும். 'சுதந்திரம் என்பது என்ன? நீ எண்ணியபடி எல்லாம் செய்வதற்கு இருக்கும் உரிமையல்ல அது. எண்ணியதைச் சொல்வதற்கு அடையும் உரிமையே சுதந்திரம்.' இவ்வாறு சுதந்திரத்துக்கு வரையறை விதித்தார் வால்டேர். அவர் எழுதிய நூல்களின் சுருக்கத்தையும், அவருடைய வாழ்க்கை வரலாற்றையும் இந்நூல் விளக்கமாக எடுத்துரைக்கின்றது.

ஃ ஃ ஃ

**இந்து சமய மாதிரி வினுவிடை**

தொகுத்தவர்: சைவப் புலவர் ஐ. இராஜரத்தினம் (ஐயன்ஞ).

விலை: ரூ. 1-50 சதம்.

வெளியீடு: கலாதேவி அச்சகம், சுன்னுகம்.

"கல்விப் பொதுத் தராதரப் பத்திரப் பரீட்சைக்குரிய புதிய பாடத் திட்டத்தின்படி எழுதப்பெற்ற உதவி நூல் இது. இவ்வினுவிடை கல்விப் பொதுத் தராதரப் பத்திரப் பரீட்சைக்கு ஆயத்தப்படுத்தும் மாணுக்கர் இந்து சமய பாடம் சம்பந்தமாகக் கற்றவற்றை மீட்டற்கு உதவியாக இருத்தற்கும் வினுக்களுக்கு விடைகள் எழுதும் முறையை விளக்குதற்கும் கருவியாக எழுதப்பட்டது" என்று தொகுப்பாசிரியர் தமது முகவுரையில் குறிப்பிட்டுள்ளார். பரீட்சை எழுதும் மாணவர்களுக்கு உதவியாக இருக்கக் கூடிய முறையில் இந்நூல் தொகுக்கப் பெற்றுள்ளது.

கல்விப் பொதுத் தராதரப் பத்திரப் பரீட்சை வினுக்களின் அமைப்பைக் கொண்டிருந்தாலும் திருவருட்பயன், சந்தானுசாரியர் சரிதம், சமயாசாரியர் சரிதம், திருக்குறள், வேதங்கள், பொது சமய அறிவு ஆகிய பிரிவுகளைக் கொண்டு தொகுக்கப்பட்டிருந்தால் மாணுக்கர்களுக்கு இன்னும் விளக்கமாக இருப்பதோடு தேவைக் கேற்றவாறு பயன்படுத்தவும் உதவியாக இருந்திருக்கும்.

## எயர்சிலோன் சேவை விஸ்தரிப்பு

கொழும்பு, ஞாயிறு

இலங்கை விமானப் போக்குவரத்துச் சேவையை பிரதேச சேவையிலிருந்து தூர பிரதேச சேவை செய்வதற்கு விரைவில் விஸ்தரிப்புச் செய்யப் போவதாக ஜெனரல் மனேஜர் திரு. பன்னிமொலமுறே தெரிவித்தார்.

அம்பாறை யாழ்ப்பாணப் பகுதிகளுக்கு விமானச் சேவை ஆரம்பிக்கப்போவதாகவும் திருக்கோணமலையிலிருந்துவாரமொன்றுக்கு 26 தடுவையாக விமானச் சேவையை அதிகரிக்கப்போவதாகவும் இலங்கையிலிருந்து பம்பாய் கராச்சி ஆகிய இடங்களுக்கு விமானச் சேவையை விஸ்தரிக்கப்போவதாகவும் திரு. மொலமுறே தெரிவித்தார்.


## மலைநாட்டில் ஈழநாடு ஏஜண்டுகள்

**கண்டி**
செல்வன் கபே, கட்டுக்கலை.
விமலா ஸ்டோர்ஸ், கொழும்பு வீதி.
ஜெகஜோதி அன் கோ.
**கம்பளை**
ஏ எஸ். கனரெட்ணம், 3|5, நுவரெலியா ரோடு.
எஸ். பி. செல்லமுத்துப் பிள்ளை.
**மாவத்துர**
தனலெட்சுமி ஸ்டோர்ஸ்.
லெட்சுமி ஸ்டோர்ஸ்.
**உலப்பனை**
திரு. ஏ. கிருஷ்ணசாமி. 275, மெயின் வீதி
**நாவலப்பிட்டிய**
எஸ். ஞானப்பிரகாசம்.
முருகேசப்பிள்ளை அன் சன்ஸ்.
**கினிகத்தென**
எம். சின்னத்துரை.
**வட்டவளை**
பி. எஸ்.ஏ. முத்தரசு சேர்வை.
**நோர்ட்டன்பிரிட்ஜ்**
ஏ. பிச்சையாபிள்ளை, நியூஸ் ஏஜண்ட்.
**கங்குவத்தை**
ஸ்ரீ முருகன் ஸ்டோர்ஸ்.
**மஸ்கெலியா**
சென்ட்ரல் மெடிக்கல் ஸ்டோர்ஸ்.
**நைன்சா எஸ்டேட்**
நைன்சா ஸ்டோர்ஸ், மஸ்கெலியா.
**நோர்வுட்**
ஸ்ரீமுருகன் ஸ்டோர்ஸ்.
**டிக்கோயா**
ஏ. நடேசபிள்ளை, மருந்துக்கடை, மெயின் வீதி.
**ஹட்டன்**
இம்பீரியல் ஸ்டோர்ஸ்
**ரொக்வுட்**
கே. எம். கறுப்பையா, ரோக்வுட் தோட்டம்.
**புசல்லாவ**
ஏ. எம். செல்லமுத்து, செல்வம் ஸ்டோர்ஸ்.
**நுவரெலியா**
எஸ். விருத்தாசலம், நியூவிக்டோரியா ஹவுஸ், ரீகல் பில்டிங்.
**ரங்கலை**
பி. எம். சேகு மொஹமட், டக்குவாரி பஜார்.
**ஒவாஎட்ட**
கணேசன் ஸ்டோர்ஸ்,
**தெல்தொட்ட**
சண்முகநாதன்ஸ்டோர்ஸ்
**கோமர**
கிருஷ்ணு ஸ்ரோர்ஸ்.
**பெரிய வேவாக்கொல்லை**
திரு. என். எம். மொஹமட்
**உளுகங்கை**
அம்பிகா ஸ்டோர்ஸ்.
**கலகா**
சிட்டி பேக்கரி.
**ராகலை**
எஸ். எம். ஆர். எம். எஸ் செல்லையாபிள்ளை, பஜார்
**நானுஓயா**
ஏ. செம்புலிங்கம்பிள்ளை.
**உடபுசல்லாவ**
எஸ். கோவிந்தசாமி, மெடிக்கல் ஸ்டோர்ஸ்.
**வத்துகாமம்**
பி. எம். பழனியாண்டி பிள்ளை அன் சன்ஸ்.
**உப்புராசி**
பி. எஸ்.பெரியசாமிபிள்ளை
**பூண்டுலோயா**
ஜயந்தி ஸ்டோர்ஸ்.



## மாணவர்களுக்கு ஓர் அறிவித்தல்

**வர்த்தகக் கணக்கியல் கல்லூரி**
**330, கே. எஸ். வீதி, — யாழ்ப்பாணம்.**

ஆண், பெண் இரு பாலாருக்கும் சகல வர்த்தக, விஞ்ஞான, கலைப்பாடங்கள் எல்லாப் பரீட்சைகளுக்கும் ஆங்கிலத்திலும், தமிழிலும் சிறந்த முறையில் போதிக்கப்படும்.

நேரம் மாலை 5 மணி தொடக்கம் இரவு 9 மணி வரை. கட்டணம்: ரூபா 10-00 மூன்று பாடங்களுக்குமட்டும்.

பெண்களுக்கு முழு நேர வகுப்புகள் சனி, ஞாயிற்றுக்கிழமைகளில் விசேஷமாக நடத்தப்படும்.

விபரங்களுக்கு நேரில் விண்ணப்பிக்கவும்.

## வியாபாரம் பெருக விளம்பரம் செய்க

# 5 கோடி தொன் குண்டு பரீட்சைக்கு ஆர்ப்பாட்டம்

## செய்திச் சுருள்

**உரக்குழியில் பிரேதம்**

திருநெல்வேலிக்கடுத்த ஒரு பேட்டையில் உள்ள ஒரு வீட்டில் பொலிசார் உரக்குழியொன்றைத் தோண்டி பெண்ணின் பிரேதமொன்றைக் கண்டு பிடித்தனர். பிரேத பரிசோதனை நடந்தபின் கொலை வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**பெண் அபேட்சகர்கள்**

இந்தியாவின் அடுத்த பொதுத்தேர்தலில் போட்டியிட பெண்கள் பெருமளவில் முன்வரவில்லையென்று தமிழ்நாடு நிதிமந்திரி ஸி. சுப்பிரமணியம் கவலை தெரிவித்தார்.

**காரைக்கால் தேர்தல்**

காரைக்கால் நகரசபைத் தேர்தலில் 14 ஸ்தானங்களில் காங்கிரசுக்கு 9 ஸ்தானங்களும் மக்கள் முன்னணிக்கு இரண்டும், சுயேச்சை மூன்று ஸ்தானங்களையும் பெற்றன. புதுவை நகரசபைத் தேர்தலிலும் காங்கிரசுக்கு பெரும்பான்மைப் பலம் கிடைத்துள்ளது.

**கோவிலில் பலி**

காஞ்சீபுரம் ஸ்ரீவரதராஜப் பெருமாள் கோவிலில் கண்ணாடி அறைத் திருப்பணியில் ஈடுபட்டிருந்த ஒரு கொத்தர் மின்சாரம் தாக்கி மாண்டார்.

**சினிமாவுக்குப் பிறகு**

கீரமங்கலத்துக்கு வண்டி கட்டிக்கொண்டு வந்து சினிமாப் பார்த்துவிட்டு பெரியநாயகி புரத்துக்குத் திரும்பிச் சென்றுகொண்டிருந்த கறுப்பையா தேவரை சிலர் வழிமறித்து அடித்துக் கட்டி வைத்துவிட்டு அவருடன் வந்த பெண்களின் நகைகளைக் கொள்ளையடித்துச் சென்றனர்.

**முதலாளி தொழிலாளி**

கைத்தொழில்கள் அபிவிருத்தியை உத்தேசித்து தொழிலாளருக்கும் முதலாளிகளுக்குமிடையே நல்லுறவு நிலவவேண்டுமென்று தமிழ்நாடு முதல்மந்திரி திரு. காமராஜர் கோவையில் டி. வி. எஸ். தொழிலாளர் யூனியன் கூட்டத்தில் கூறினர்.

**சலவைத் தொழிலாளி!**

பதினெட்டு வயதுடைய ஒரு இளம் பெண்ணை கத்தியால் குத்திவிட்டுத் தலைமறைவாய் திரிவதாகக் கூறப்படும் சலவைத் தொழிலாளி ஒருவரை சைத்தாப்பேட்டை பொலிசார் தேடுகின்றனர்.

**தங்கச் சுரங்கம்!**

சிங்கப்பூரிலிருந்துவந்த ஒரு பிரயாணியிடமிருந்த 13,500 ரூபாய் பெறுமதியான தங்கத்தைச் சென்னை சுங்க அதிகாரிகள் பறிமுதல் செய்தனர். பெல்காமில் 1.15 லட்சம் ரூபாய் பெறுமதியான தங்கத்தைச் சுங்க அதிகாரிகள் கைப்பற்றினர்.

**அபின் அகப்பட்டது!**

நாகூர் ரயில் நிலையத்தில் இந்தோ-சிலோன் எக்ஸ்பிரஸ் ரயிலில் இணைப்பதற்காகவுள்ள பெட்டியிலிருந்த ஒரு பிரயாணியிடமிருந்து 12,500 ரூபாய் பெறுமதியான அபின் கைப்பற்றப்பட்டுள்ளது.

**மின்சார திருடன்!**

சென்னையில் புதிதாகக் கட்டப்பட்ட வீடுகளிலிருந்து 'எலக்ட்ரிக்' மீட்டர்களும், ஸ்விட்ச் பெட்டிகளும் 38 தடவைகள் திருட்டுப்போவதற்கு காரணமாக இருந்தவனும் பொலிசுக்கு திகைப்பை ஏற்படுத்திவந்த "மின்சார திருடன்" கடைசியில் அகப்பட்டுக் கொண்டான்.

**பகல் கொலை!**

சிதம்பரத்தில் பிரபல வக்கிலான திரு. கே. கோபாலய்யர் சென்றிருந்த சமயம் அவரது மனைவி லட்சுமியம்மாளை யாரோ கொலைசெய்துவிட்டனர்

## இத்தாலியில் 12,000 மக்கள் கலந்துகொண்டனர்

### ஐ. நா. தீர்மானம் ரஷ்யாவுக்கு அனுப்பப்பட்டது

நியூயோர்க், அக். 29

5 கோடி தொன் சக்தி வாய்ந்த ஹைட்ரஜன் குண்டை பரீட்சிக்க வேண்டாமென சோவியத் யூனியனைக் கேட்டுக்கொண்டு ஐ. நா. மகாசபை நிறைவேற்றிய தீர்மானத்தின் பிரதி இன்று சோவியத் பிரதமர் குருஷ்சேவுக்கு முறைப்படி அனுப்பி வைக்கப்பட்டது.

இந்த மாதம் 31ந் திகதி 5 கோடி தொன்சக்தி வாய்ந்த ஹைட்ரஜன் குண்டை வெடித்துப் பரீட்சை செய்வதுடன் அணு ஆயுத பரிசோதனைகளின் தொடர் முடிவுக்குக் கொண்டுவரப்படுமென திரு குருஷ்சேவ் அறிவித்திருந்தார்.

**கதிரியக்கம் குறைக்கப்படும்**

பரிசோதனைகளினால் கதிரியக்கம் அதிக அளவு பரவாவண்ணம் சாத்தியமான சகல நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டு வருவதாக சோவியத் பிரதமர் குருஷசேவ், சோவியத் கம்யூனிஸ்ட் கட்சியின் 22வது மகாநாட்டில் தெரிவித்தார்.

சோவியத் யூனியன் சமீபத்தில் பரீட்சித்த குண்டு பற்றி பெருமளவு கண்டனப் பிரசாரம் நடைபெற்று வருகிறது. ஆனால் சென்ற யுத்தத்தின் போது ஹிரோஷிமாவிலும் நாகசாக்கியிலும் அமெரிக்கா வீசிய குண்டுமிக மோசமானது; அமெரிக்கா அப்பொழுதுசெய்த பெரும் குற்றம் என்று திரு. குருஷ்சேவ் கூறினர்.

**ஆர்ப்பாட்டம் அதிகரிக்கிறது**

இம்மாத முடிவுக்குள் ஐந்து கோடி தொன் சக்தி வாய்ந்த ஹைட்ரஜன் குண்டு ஒன்றை சோவியத் யூனியன் பரீட்சிக்க உத்தேசித்துள்ளதற்கு ஆட்சேபம் தெரிவித்து பல இடங்களிலும் ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்று வருகின்றன.

இத்தாலியில் மிலான் என்ற இடத்தில் நேற்று நடைபெற்ற ஒரு அமைதியான ஆர்ப்பாட்டத்தில் 12,000 மக்கள் கலந்து கொண்டனர்.

நியூயோர்க்கில் நடைபெற்ற ஒரு ஆர்ப்பாட்ட ஊர்வலத்தில் சுமார் இரண்டாயிரம் மக்கள் கலந்து கொண்டனர்.

சென்ற திங்கட்கிழமை சக்தி வாய்ந்த ஒரு குண்டை சோவியத் ரஷ்யா பரீட்சித்ததனால் பல இடங்களிலும் பெருமளவு கதிரியக்கம் பரவியுள்ளதாக அறிவிக்கப்படுகிறது.

தென்கிழக்கு கனடாவை நோக்கி மணிக்கு எண்பது மைல் வேகத்தில் கதிரியக்க மண்டலம் சென்று கொண்டிருப்பதாக அறிவிக்கப்படுகிறது.

---

### பிரவேசிக்க வேண்டாம்!

லியப்போல்ட்வில்லி, அக். 29

கடங்காவுக்குள் பிரவேசிக்கவேண்டாமென்று காங்கோ படைகளுக்கு காங்கோ மத்திய அரசாங்கம் உத்தரவிட்டிருப்பதாக ஐ. நா. பிரதிநிதி திரு. கியாரி தெரிவித்தார்.

கடங்காமீது தாக்குதல் எதுவும் நடைபெற மாட்டாதென்று ஷோம்பேக்கு உறுதியளிக்கப்பட்டுள்ளது.

## பழைய கச்சேரியில் ஏடுகள் தேடுவாரற்று கிடக்கின்றன

கண்டி, ஞாயிறு

பௌத்த மதத்தையும் இலங்கைச் சரித்திரத்தையும் பற்றிய பெருந் தொகையான சிறந்த நூல்களும் ஓலைச் சுவடிகளும் கண்டி நகரத்தின் பழைய கச்சேரியில் தேடுவாரற்றுக் கிடக்கின்றன. இப் புத்தகங்களும் ஏடுகளும் முன்னர் பொது மக்கள் வாசிப்பதற்குக் கிடைக்கக் கூடியனவாக வைக்கப்பட்டிருந்தன. இப்போது இவை அலமாரிகளில் அடைக்கப்பட்டுக் கிடக்கின்றன.

கண்டியிலுள்ள கலைப்பகுதி வாசிகசாலைக்கே இந்த நூல்கள் சொந்தமானவை. சுமார் முக்கால் நூற்றாண்டு காலத்துக்கு இவை கண்டி தலதா மாளிகவாவில் வைக்கப்பட்டிருந்தன. மாளிகவா கட்டட திருத்த காரணமாக மாளிகவா அதிகாரிகள் இந் நூல்களை அங்கிருந்து அகற்றும்படி அரசாங்கஅதிகாரியும் நூல்நிலையத் தலைவருமானவரை கேட்டுக் கொண்டனர். மாளிகவா திருத்த வேலைகள் முடிந்தபின்னர் நூல்களைத் திரும்பவும் அங்கு வைப்பது என இருசாராரும் ஒப்பந்தம் செய்து கொண்டனர். ஆனல் திருத்த வேலைகள் முடிந்தபின்னரும் அவ்வாறு செய்யப்படவில்லை.

கண்டி நூதனசாலை ஆலோசக கமிட்டி அண்மையில் கூடிய கூட்டமொன்றின்போது கலைப் பகுதி வாசிகசாலைக்குச் சொந்தமான இப் புத்தகங்களைத் தம்மிடம் ஒப்படைக்கும்படி கேட்டுக்கொண்டது.

தற்போதைய அரசாங்க அதிபர் திரு. சி. ஜே. சேரசிங்க மாலிகவ கட்டடத்தில் புத்தகங்கள் வைக்கப்படலாம் என்று தேசிய நூதனசாலைப் பகுதிக்கு அறிவித்துள்ளார்.

விலை உயர்ந்த புத்தகங்களை வைப்பதற்கு உகந்த பாதுகாப்பான அறையொன்றைக் கட்டும்படி உள்நாட்டுக் கலாச்சார மந்திரியைக் கேட்பதென ஆலோசனைக் கமிட்டி தீர்மானித்துள்ளது. மாலிகாவின் ஒரு பகுதியில், கடைசிச் சிங்கள மன்னன் விக்கிரம இராஜசிங்காவின் ஞாபக சின்னங்களைப் பாதுகாப்பதற்கு ஒதுக்குவது என தியவாதன நிலாமே எச். எல். றத்வட்ட திசாவா உறுதியளித்துள்ளார்.

---

### பிரிட்டிஷ் விவசாயப் பொருட்காட்சி

யாழ்ப்பாணம், ஞாயிறு

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில் இம் மாதம் 25-ம் திகதி ஆரம்பமாகவிருந்த பிரிட்டிஷ் விவசாய கண்காட்சி நவம்பர் மாதம் முதலாம் திகதி ஆரம்பமாகவிருக்கிறது.

வடபகுதி உதவி வித்தியாதிபதி திரு. எஸ். யூ. சோமசேகரத்தினால் திறந்துவைக்கப்படவிருக்கும் இப் பொருட்காட்சி நான்கு நாட்களுக்குத் தொடர்ந்து நடைபெறும்.

## "மக்களின் மனதை மாற்றவும் போராடுகிறோம் இதில் கல்வி நிலையங்களும் பங்குபெற வேண்டும்"

### பிரதமர் நேரு கருத்து

புதுடில்லி, அக். 29

பாடப்புத்தகங்கள் தயாரிப்பதையும் விநியோகிப்பதையும் பணத்தையே குறிக்கோளாகக் கொண்ட தனியார்களிடம் விட்டுவைக்கக்கூடாது. பாடப் புத்தகங்களை தயாரிக்கும் பொறுப்பையும் விநியோகிக்கும் பொறுப்பையும் அரசாங்கமே ஏற்றுக்கொள்ளவேண்டுமென்பது எனது உறுதியான கருத்து."

இவ்வாறு பாரதப் பிரதமர் திரு. நேரு இன்று புதுடில்லியில் நடைபெற்ற சர்வகலாசாலை துணைவேந்தர்களின் இரண்டாவது நாள் மகாநாட்டில் பேசுகையில் கூறினர்.

தேசிய ஒற்றுமையையும் பொதுநல உணர்வையும் மக்களிடத்தில் ஊட்டும் பணியை கல்விக்கூடங்களும் சர்வகலாசாலைகளும் மேற்கொள்ள வேண்டும் என்று பிரதமர் நேரு கூறினர்.

"பாரதத்திலும் உலகிலும் இப்பொழுது பெரிய பெரிய மாறுதல்கள் ஏற்பட்டுவருகின்றன. இப்பொழுது கல்விக்கூடங்களிலும் சர்வகலாசாலைகளிலும் புதிய புதிய சாரார் கல்விபயிலவருகிறார்கள். இவர்கள் முன்னர் கல்விக் கூடங்களையே கண்டறியாத குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் இவர்கள் கல்விக்கூடங்களுக்கு வருவது நல்ல முன்னேற்றம்தான். ஆனல் அவர்கள் தங்களுக்கும் மற்றவர்களுக்கும் புதிய பிரச்சினை" என்று கூறிய பிரதமர் நேரு மேலும் கூறியதாவது:-

நமது நாட்டின் இளைஞர்களிடத்தில் தகுதியிருக்கிறது. அவர்களிடையில் மோசமான குணமுள்ளவர்களும் நல்ல குணமுள்ளவர்களும் இருக்கிறார்கள். இவர்கள் ஒரு பிரச்சினையல்ல. இவர்களைத் திருத்திக் கொள்வது சுலபம். இவர்கள் தவிர நடுத்தரமான குணமுள்ளவர்கள் தான் பெருமளவிலிருக்கிறார்கள். இவர்கள் தான் பிரச்சினை. இவர்களைத் திருத்துவது கல்விக்கூடங்களினதும் சர்வகலாசாலைகளினதும் பொறுப்பு.

நமது நாட்டில் மக்களிடம் பொது நலஉணர்வு சற்றும் இல்லை. இந்த உணர்வை கல்விக்கூடங்களும் சர்வகலாசாலைகளும் உண்டாக்க வேண்டும்.

'பாடப் புத்தகங்கள் தரமுள்ள ஆசிரியர்களால் தயாரிக்கப்படவேண்டும். பாடப் புத்தகங்கள் அதிலும் குழந்தைகளுக்கான பாடப்புத்தகங்கள் திறமையுள்ளவர்களைக் கொண்டு தயாரிக்கப்பட வேண்டும்.

அலிகார் சம்பவம்பற்றி பிரதமர் நேரு குறிப்பிட்டு அது மோசமானதும் பாவந்தானென்றாலும் பதற்றமடைய வேண்டியதில்லையென்றார்.

"நாட்டின் அபிவிருத்திக்காக மட்டும் நாம் போராடவில்லை. மக்களின் மனங்களையும் உணர்ச்சிகளையும் மாற்றுவதற்கும் நாம் போராட்டம் நடத்திக்கொண்டிருக்கிறோம். இப்போராட்டங்களுக்கும் சர்வகலாசாலைகளுக்கும் பெரும் பங்குண்டு" என்று பிரதமர் நேரு கூறினர்.

### இந்தியா-போலந்து வர்த்தகம்

புதுடில்லி, அக். 27

இந்தியாவுக்கும் போலத்துக்குமிடையில் வர்த்தக ஒப்பந்தம் பற்றிய பேச்சுவார்த்தைகள் இன்று புதுடில்லியில் ஆரம்பமானது.

## 'மேனன் ஆபத்தான பிரதிநிதி என்பதை மக்கள் அறிவர்'

### பம்பாயில் தமது போட்டிபற்றி திரு. கிருபளினி அறிக்கை

பம்பாய், அக். 28

பொதுக்கூட்டத்தில் அடுத்த தேர்வில் கிருபளானிக்கும்' மேனனுக்கும் நடக்கவிருக்கும் போட்டிபற்றி பிரதம மந்திரி நேருபேசியதைக் குறிப்பிட்டு. ஆசாரிய ஜே. பி. கிருபளானி வெளியிட்ட அறிக்கை வருமாறு:—

பம்பாய் நகரப் பிரஜைகளும், அதிலும் குறிப்பாக, கிருஷ்ண மேனன் எத்தகைய ஆபத்தின் பிரதிநிதியாக இருந்து வருகிறாரென்பதை உணர்ந்திருப்பதால், என்னை ஆதரிப்பதற்கு விழைந்துள்ள வட பம்பாய் தொகுதி வாக்காளர்கள் உள்ளிட்ட இந்திய மக்கள் என்ற ஒரு கட்சி இருக்கிறது. மற்றொரு கட்சி நானேயாகும்; இந்நாட்டின் பொது வாழ்க்கையில் செல்வம் அல்லது பணத்துடன் சம்பந்தப்படாத ஒன்றின் பிரதிநிதியாக என்னை ஒப்புக்கொள்வார்களென்றே நம்புகிறேன்.

நேருஜி பேசிய பொதுக்கூட்டம் கோவாவுக்காக நடந்ததென்றாலும் வட பம்பாய் தொகுதியில் நான் அபேட்சகனாக நிற்பதைப் பற்றி குறிப்பிடுவதற்கு அந்த மேடையை பயன்படுத்திக்கொள்வதென்ற ஆசையை அவரால் அடக்கிக் கொள்ள இயலவில்லை.

எந்த யோசனையும் கூறி கிருபளானிக்கு தயவு காட்டப் போவதில்லை என்று பிரதம மந்திரி கோபத்தோடு பேசியிருக்கிறார். இதற்கு அவசியமே இல்லை. சுதந்திரம் கிடைத்த பிறகு அவரிடமிருந்தோ அல்லது அதிகாரத்திலுள்ள வேறு எவரிடமிருந்தோ எந்தத் தயவையும் என்றைக்கும் எதிர் பார்த்ததில்லை;

கிருஷ்ண மேனன் தோல்வியைத் தம்முடைய தோல்வியாக நேருஜி கருதாதது நல்லது. காங்கிரஸிற் கெதிராக ஒவ்வொரு ஸ்தானத்துக்கும் நடக்கும் போராட்டம் காங்கிரஸிற்கு சவாலாகுமென்பதும், சொந்த ஹோதாவில் நேருஜிக்கு சவால் அல்லவென்பதும் புரியக்கூடிய நிலையாகும். என் விஷயத்தில் நேருஜியே தமக்கு சவால் என்று குறிப்பாகக் கருதினலன்றி அவருக்கு சவால் அல்ல.

### மணி வாக்கு

உத்தம எண்ணங்களில் தோய்ந்திருப்பவன் ஒரு போதும் தனிமையை அனுபவிப்பதில்லை.


ஈழநாடு

EELA NADU

யாழ்ப்பாணம் பிலவ ஆண்டு ஐப்பசி மீ 14 உ (30-10-61)

EELA NADU: National Tamil Daily Post Box 49, Jaffna Telegrams EELA NADU Jaffna Phone: 389.


## பாடசாலைகள் உத்தரவு

பாடசாலைகள் விஷயமாக வித்தியாதிபதி வெளியிட்டுள்ள அறிக்கையில் பாரதூரமான மாறுதல்களைக் காண்கிறோம். இலங்கையிலுள்ள பாடசாலைகளை நான்கு பிரிவுகளாகத்தரம் பிரித்துள்ளதுடன், ஒவ்வொரு பிரிவுப் பள்ளிக்கூடங்களிலும் மாணவர்களை எந்த முறையில் சேர்க்க வேண்டுமென்றும் புதிய விதிகள் கூறுகின்றன.

இவ்வித முக்கிய மாறுதல்கள் யாருடைய யோசனையின் மீது செய்யப்படுகின்றன என்பது அறிக்கையில் விளக்கப்படவில்லை. தேசியக் கல்விக் கமிஷன், நாட்டின் கல்வி விஷயமாக விசாரணை செய்து, இடைக்கால அறிக்கையைச் சமர்ப்பித்துள்ளதாகத் தெரிகிறது. ஆனால் கல்வி இலாகா அதிபதி வெளியிட்டுள்ள மேற்குறித்த மாறுதல்கள் கல்விக் கமிஷனின் இடைக்கால யோசனைகளில் அடங்கியுள்ளதாகத் தெரியவில்லை. பார்லிமெண்டிலே இதுபற்றி விவாதித்து அதன் அங்கீகாரத்தையும் பெறவில்லை. பார்லிமெண்ட் சபையில் பரிசீலனை செய்திருந்தால் இந்தயோசனைகளின் சாதகபாதகங்களை அறிய முடியும். தேசியக்கல்விக்கமிஷன் தன் கடமையில் ஈடுபட்டிருக்கையில், அதற்குப் புறம்பாக இப்புதிய மாறுதல்களைச் செய்திருப்பதாயின், அது ஒழுங்கோ விவேகமோ ஆகாது. இக்கமிஷனை நியமித்திருப்பதிலும் அர்த்தமில்லை.

மாணவர்களைச் சேர்த்துக் கொள்ளுவது, அவர்களது திறமையையும் தகுதியையும் பொறுத்தே இருக்க வேண்டும். மத விகிதாசாரக் கணக்கின்மீது சேர்த்துக் கொள்வதாயின், தகுதி வாய்ந்த பல மாணவர்களுக்கு இடமில்லாமற் போகலாம். பாடசாலைகளில் சமயக்கல்வி அளிக்க வேண்டியதே. ஆனல் சமயம் காரணமாக, தகுதி வாய்ந்த எந்த மாணவருக்கும் எந்தப் பாடசாலையிலும் இடம் கிடைக்காமற் போவதாயின் அது நீதியாகாது.

இந்தப் புதிய உத்தரவில் தோட்டப் பாடசாலைகள் சேர்க்கப்படவில்லை. தீவெங்கும் கல்வியில் பல சீர்திருத்தங்கள் ஏற்பட்டும், தோட்டப் பாடசாலைகள் அபிவிருத்திக்கோ, அல்லது அங்குள்ள மாணவர்களுக்கு நல்ல கல்வி கிடைக்கவோ எவ்வித ஏற்பாடும் செய்யப்படவில்லை. இது பாரபட்ச வேற்றுமை காட்டுவதுடன், மனித நீதிக்கும் உகந்ததாகாது.

கல்வி முறையில் மாறுதல்கள் அவசியமே. வித்தியாதிபதியின் உத்தரவுகளில் பல நல்லனதாகவும் இருக்கலாம் என்ருலும், இப்புதிய உத்தரவுகளை அமுலுக்குக் கொண்டு வருமுன் பார்லிமெண்ட் சபையில் விவாதித்து பரிசீலனை செய்ய சந்தர்ப்பமளித்தால், இதுபற்றி தக்க திருத்தங்கள் செய்யவும், கூடுமானவரை யாருக்கும் தீங்கு ஏற்படாமல் தடுக்கவும் உதவியாக இருக்கும்.

# ஆசிரியர்களுக்கு சோதனை காலம்

## உரிமைகளைப் பாதுகாக்க முன்னணி

**ஆசிரியர்கள் அனுபவித்து வரும் உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டிய அவசியத்தை இக்கட்டுரை நன்கு வற்புறுத்துகின்றது. 'தி சிலோன் டீச்சர்' எனும் ஆங்கில வெளியீட்டிலுள்ள கட்டுரையின் தமிழாக்கம் இது.**

ஆசிரியர்களின் உரிமைகள் இன்று புறக்கணிக்கப்பட்டு வருகின்றன. ஆசிரியர்கள் புறக்கணிக்கப்படுவதால் விபரீத விளைவுகள் ஏற்படக்கூடியதாய் இருக்கின்றது. ஆசிரியர்களின் முக்கியத்துவத்தை, அவர்களுக்கு வழங்கப்படும் சம்பள அடிப்படையிலும், அவர்களது உரிமைகளின் அடிப்படையிலும் சமுதாயம் இன்று கணிக்கவில்லை.

அரசாங்கந்தான் இத்துறையில் தனது கவனத்தைச் செலுத்துகின்றது. சமுதாயத்தில் ஆசிரியன் வகித்து வரும் பெருமை மிக்க ஸ்தானத்திலிருந்து ஆசிரியனை விரட்டியடிப்பதற்கு அரசாங்கமே திட்டமிடுகின்றது. ஆசிரியன் அரசாங்க ஊழியனுகிருன் என்று அரசாங்கம் சமாதானம் கூறிக் கொள்ளுகின்றது.

### பொருந்தாச் செயல்

பல சேவைகளையும் ஸ்தாபனங்களையும் அரசாங்கம் தேசியமயமாக்கியுள்ள இக்காலத்தில், குடியேற்ற நாட்டு ஆட்சி முறையின்போது நிலவி வந்த அரசாங்க சேவைச் சட்டங்களை அமுல் செய்வது காலத்துக்குப் பொருந்தாச் செயலாகும். எனினும் இப்பழைய நியதிகளே, அரசாங்க சேவையாளரின் அரசியல் உரிமைகளைத் தகர்த்தெறியும் ஆயுதங்களாக இருக்கின்றன. அரசாங்கத்தின் தாளத்துக்கேற்ப அரசாங்க சேவையாளர்கள் ஆட்டம் போடுவதற்கு அரசாங்க சேவைச் சட்டங்களே கருவிகளாக அமைந்துள்ளன. ஆசிரியர்களின் தொழிற் சுதந்திரத்துக்குப் பங்கம் ஏற்பட்டு வருவதை நோக்குமிடத்து, ஆசிரியர்கள் இதற்கு எதிர்ப்புக் காட்டாமல் இருப்பார்கள் என்று சொல்வதற்கில்லை. சமீபத்தில் நடைபெறப்போகும் வருடாந்தக் கூட்டத்தில் ஆசிரியர்கள் வெளிப்படுத்தவிருக்கும் வேறுபட்ட கருத்துக்களின் எதிரொலிகள் கல்வி முறையின்மீது ஏற்பட்டுள்ள அபிப்பிராய பேதங்களைப்பிரதிபலித்துக்காட்டும் என்பதில் சந்தேகமில்லை. இந்தப் பிரச்சினையைப் பண்புள்ள வகையில் தீர்த்துவிட வேண்டும் என்பதுதான் ஆசிரியர்களின் ஆசை. ஆனல் அகில இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பிரதிநிதிக் குழுவொன்று இது விஷயம்பற்றி கல்வி மந்திரியுடன் நேரடிப் பேச்சு வார்த்தை நடாத்த முற்பட்டபோது அதற்குக் கல்வி மந்திரி மறுத்ததையிட்டு அ. இ. ஆ. ச. கவலை தெரிவிக்கின்றது.

### மக்நெயர் அறிக்கை

தாம் அரசியல் வாதிகளாகி விடுவதற்கோ அல்லது மாணவர்களிடையே அரசியல் கொள்கை எதையும் பரப்புவதற்காகவோ ஆசிரியர்கள் அரசியல் உரிமைகளுக்கு ஆர்ப்பரிக்கவில்லை. ஆசிரியரின் பழைய வரலாறே இதற்குச் சான்று பகரும். தமது சொந்த மன நிலைகளையும் விருப்புக்களையும் வளர்ச்சிபெற்றுவரும் இளம் உள்ளங்களில் பதியச்செய்து கொள்வதற்கு ஆசிரியர்களுக்குச் சுதந்திரம் வேண்டும்.

ஆசிரியர்களின் ஒழுங்கீன வாழ்க்கையைப்பற்றி வருத்தத்துடன் பிரஸ்தாபிக்கும் மக்நெயர் அறிக்கை பொது விவகாரங்களில் பங்குபற்றுவதற்கு ஆசிரியர்களுக்கு ஆர்வம் அளிக்கப்படல் வேண்டும் என வலியுறுத்துகிறது. கல்வி கற்றுள்ள மக்கள் சமுதாயமே ஆசிரியர்கள் தனிப்பட்ட ஒரு வர்க்கத்தினராகப் பிரித்துவிடுவதை ஏற்றுக்கொள்ளவில்லை. ஆசிரியர்கள் முழுமைவாய்ந்த வாழ்க்கை வாழுகிருர்களா என்பது கவனிக்கப்படல் வேண்டும். என்று மக்நேயர் அறிக்கை வலியுறுத்துகிறது.

ஒருவரில் ஒருவர் தங்கி வாழும் இந்த உலகிலே, ஆசிரியர்களின் பரந்த கடமைகளை நாம் மனதில் கொள்ளல்வேண்டும். சமுதாய வளர்ச்சியில் ஆசிரியனுக்குள்ள பெரும் பங்குகளை நாம் கருத்தில் கொள்ளவேண்டும், ஆசிரியனின் செல்வாக்கின் எல்லை அடிக்கடி மாறிக்கொண்டு செல்கிறது. புதிய எண்ணக் கருத்துக்கள், புதிய கண்டுபிடிப்புகள், அரசியல் மாற்றங்கள் சினிமா, வானெலி சுருங்கச் சொன்னல் மக்கள் வங்கி தொடக்கம் உருளைக் கிழங்குச் செய்கைவரை ஆசிரியரின் வகுப்பறை வேலைகளைப் பாதித்தே வருகின்றன. இவற்றுள் அரசியல் கலப்பில்லாதவை எவை எனத் தீர்மானிப்பது மிகச் சிரமமான ஒரு காரியம். எனவே 'அரசியல்' கட்டுப்பாடு எதுவும் ஆசிரியனின் தொழிலை வறிதாக்கிச் சீர்கேடாக்கும். அத்தோடு ஒவ்வொரு ஆசிரியனுக்குமான தனி மனிதப் பண்புகளை ஆசிரியன் மாணவர்கள் மீது பதியவைப்பதற்கும் இது தடையாகவிருக்கும்.

### குற்றங்குறைகள்

நாம் கட்டியெழுப்ப முயலும் ஜனநாயக சமுதாயம் குற்றம் குறைகளுக்குள்ளாவது இயல்பே. மாற்றங்கள் ஏற்படுவதற்கு இவை கருவிகளாக அமைகின்றன என்பதை நாம் நினைவில் வைத்திருக்கவேண்டும். மக்களனைவருக்கும் வாக்குரிமை உண்டு. ஆகையால் மக்கள் அனைவருமே கல்வியறிவுடையவர்களாக இருக்கவேண்டும். அப்போதுதான் மக்கள் தேசிய தேவைகளைக் கிரகித்துச் சுயநலனுக்கன்றிப் பொதுநலனுக்காக தமது வாக்குரிமைகளை உபயோகம்செய்வார்கள். புதிய கொள்கைகளைப் பிரசாரம் செய்பவர்களில் மக்கள்மோகங்கொண்டு கட்டுண்டு வரும் துக்க சம்பவத்தை நாம் அடிக்கடி காண்கிறோம். பொது மக்களின் உளப்பாங்கை அறிந்து அவர்களைத் தம்வயமாக்கி வருவதைப் பார்க்கின்றோம்.

புத்தி சாதுரியம் நிறைந்த தேசங்களை அடக்கு முறையான அரசாங்கங்களுக்குச் சளைத்துப்போய்விட்டன. மனிதன் எவ்வளவு இலகுவில் தனது பொறுப்புணர்ச்சியை கைவிட்டுவிடுகிருன் என்பதையே இது எடுத்துக் காட்டுகிறது. எனவே, குறை நிறைகளை எடுத்துக் கூறும் பழக்கம், மிகவும் அவசியம். வாக்குரிமையை மிகவும் பிரயோசனமுள்ள முறையில் உபயோகிப்பதென்ருல் குறைபாடுகளை எடுத்துரைப்பது இன்றியமையாததாகும்.

சமுதாயத்தின் குணதோஷங்களை எடுத்துக் காட்டுவது மாற்றங்களை உண்டாக்குவதற்கேற்ற முக்கிய கருவியாகும். பல வகுப்புக்களைக் கொண்ட எமது சமுதாயத்தில் கண்டனத்துக்குள்ளான எந்தக் கொள்கையும் ஒரு சில செல்வாக்கையேனும் உண்டு பண்ணியே தீரும். ஆசிரியர்களை விட வேறு எவர்தான் இக் கண்டனக் கருவியைத் திறம்பட இயக்க முடியும்? தினமும் உண்டாகும் பிரச்சினைகள் பற்றி ஆசிரியர்கள் தமது தன்மைக்கும், வன்மைக்கும், பண்புக்கும் ஏற்ப தனித்தன்மை வாய்ந்த அபிப்பிராயங்களை வெளியிடுவர். "அரசியலானது நீதியின் பிரதிபலிப்பு" என்று சிறந்த தேசாபிமானியும் கல்விமானுமாகிய ஒருவர் கூறியுள்ளார். பலவகையானவர்களுடனும் தினமும் பழகுவதற்கு ஆசிரியர்களுக்கு வாய்ப்பு உண்டு. எனவே இவர் நித்திய பிரச்சினைகள் பற்றி தாம் பழகிக் கொள்வோரிடம் நடுத்தரமான அபிப்பிராயங்களை வெளியிடலாம் அல்லவா?

மக்களால் 'விரும்பப்படும் அரசாங்கம் எதுவும் ஆசிரியர்கள் சுதந்திரத்தில் நேர்மையின்றித் தலையிடமாட்டாது. இந்திய லோக்சபையில் எதிர்கட்சித் தரப்பினர் ஒருவர் ஆசிரியர்களை அரசியலில் ஈடுபடாமல் இருக்கச் செய்ய முடியாதா என்று கேட்டதற்கு இந்திய கல்வி மந்திரி பின்வருமாறு கூறியிருந்தார்:-

"விசுவாசமுள்ள பெருந்தொகையான மக்கள் பகுதியொன்று நாட்டுக்குச் செய்யக்கூடிய தொண்டுகளை முறியடிக்க எமது அரசாங்கம் விரும்பவில்லை" இவ்வாறு இந்திய கல்வி மந்திரி டாக்டர் ஹிமாலி ஒளிவு மறைவின்றிக் கூறியிருந்தார். விருத்தியடைந்து வரும் இலங்கை போன்ற ஒரு நாட்டின் கொள்கைகளைச் சீர்படுத்துவதற்கு ஆசிரியர்களின் கருத்துக்கள் தேவைப்படுகின்றன.

வீடுகளிலும் நகரங்களிலும் உள்ள முன்னேற்றவாதிகளும், பெரியோர்களும் பள்ளிக்கூடங்களில் கடமையாற்றும் ஆசிரியர்களே என்பதை மறந்துவிடக் கூடாது.

நிர்வாகங்களைப் பன்முகப்படுத்தி முன்னேற்றப் பாதையில் செல்லத் தீர்மானிக்கும் அரசாங்கம் ஒன்று ஒரு தொழிலாள வர்க்கத்தை பின்நோக்குடன் நசுக்க நினைக்கின்றது என்பதை நம்பமுடியாதிருக்கிறது. இப்படியான சோதனைக் காலமொன்றில் ஆசிரியத் தொழிலில் ஈடுபட்டுள்ள அனைவரும் ஒன்று கூடி ஒரு முன்னணியை ஏற்படுத்த முனைந்துள்ளார்கள் என்ற செய்தி மகிழ்ச்சியூட்டுவதொன்ருகும். தமது உரிமைகள் பறிபடாதிருப்பதற்கு இவர்கள் மிகுந்த ஆர்வத்துடன் ஒருமுகமாக நின்று உழைக்க முன்வந்திருப்பது ஒரு சுப சகுனமாகும்.

---

### மனித உரிமையும் சம நீதியும்

தென்னபிரிக்காவில் மனித உரிமைக்கும், சம நீதிக்கும் மாருக நடைபெறும் காரியங்களை, இலங்கைப் பிரதிநிதி திரு ஏ. பி. பெரேரா ஐக்கிய நாடுகளின் விசேஷ கமிட்டிக் கூட்டத்தில் மிக வன்மையாகக் கண்டித்து, தென்னபிரிக்க அரசாங்கத்தின் மீது பொருளாதாரம் முதலிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமெனக் கூறியிருக்கிருர். அவருக்கு ஒரு 'சபாஷ்' கூற வேண்டும். மனித உரிமையையும், சம நீதியையும் பாதுகாக்க வேண்டியது பற்றி ஐ. நா. ஸ்தாபனம் பல சிபார்சுகளைச் செய்திருக்கிறது. அவற்றை மதித்து இலங்கை மனிதாபிமானத்துடன் காரியங்கள் செய்வதாயின், இலங்கையில் நாடற்ருேர் பிரச்சினை அதிக சுலபமாகத் தீர வழி பிறக்கும்.

---

நைரோபி, அக். 29

கென்யா தேசிய ஆபிரிக்க யூனியனின் தலைமைப்பதவியை திரு. நோமோ கென்யாட்டா ஏற்றுக்கொண்டுள்ளார். கட்சியைச் சீர்திருத்துவதற்கு திரு. கென்யாட்டாவுக்கு பூரண அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

---

## ஐயாறன் எழுதுவது

காலம் நல்லதாக இருந்தால் ஒரு பாம்பு கூட நமக்குநல்லது செய்து காப்பாற்றலாம். காலம் கூடாதாயின், ரேடியோ கேட்பதும்கூட ஆபத்தாக முடியலாம்.

வட இந்தியாவில் பீகார் மாகாணத்தில் சமீபத்தில்பயங்கர வெள்ளம் ஏற்பட்டதல்லவா? அங்கு முஸாகர் எனுமிடத்தில் வெள்ளம் வந்து, 83 பேர்களை அடித்துக் கொண்டு போய்விட்டதாம். வெள்ளம் அடித்துக்கொண்டு போகையில், ஒருவர் பக்கத்திலிருந்த ஆலமரத்திலிருந்து ஏதோ தொங்குவதைக் கண்டு அது விழுதுதான் என்று நினைத்து அதைப் பிடித்துக் கொண்டு மரத்தின் மீதேறி வெள்ளத்திலிருந்து உயிர் தப்பிவிட்டாராம். பின்னர் பார்க்கையில் அது ஆலம் விழுதல்லவென்றும், பாம்பின் வால் என்றும் தெரிந்ததாக பாட்னவிலிருந்து கிடைத்த ஓர் அதிசயச்செய்தி தெரிவித்தது.

தன் வாலைப் பிடித்து ஏறிய ஆளை பாம்பு கடிக்காமல் விட்டதும் ஆச்சரியமே!

* * *

பொலன்னறுவையிலே ஒரு கடைக்கு முன்பாக ஆறு பேர் ரேடியோவைக்கேட்டுக்கொண்டிருந்தார்கள். வானத்தில் மேகங்களில்லை. ஆனல் திடீரென ஒரு மின்னல் வானத்திலிருந்து தாக்கி அந்த ஆறு பேரையும் வீழ்த்திவிட்டதாம். ரேடியோ பெட்டியும் நாசமாயிற்று. 65 வயதான கலுபண்டா ஸ்தலத்திலேயேமாண்டார். மற்ற ஐவரும் ஆஸ்பத்திரியில் மூர்ச்சை தெளியாமல் கிடக்கிருர்களாம்!

நம் உயிருக்குத்தான் எதிர்பாராமல் எவ்வளவு ஆபத்துகள்! இந்த ஆபத்துக்கெல்லாம் தப்பி நாம் உயிர் வாழ்வது பெரிய ஆச்சரியமல்லவா! நம் கெட்டித்தனத்தால், இவ்வித திடீர் ஆபத்துக்களை நீக்கிக்கொள்ள முடியுமா? இதை சற்றே யோசித்தால், விதி செய்யும் விளையாட்டுகளையும், நம்மால் ஆவது ஒன்றுமில்லை என்பதையும் உணரமுடிகிறதல்லவா?

* * *

இலங்கை ஜனநாயக காங்கிரஸில் மீண்டும் வேற்றுமை புகுந்து பிளவு ஏற்படலாமென்று கேள்விப்பட்டேன். இதைக் கேட்க மிக வருத்தமாக இருந்தது.

நேருஜி இலங்கை வந்த போது, இங்கு நெல்லிமூடை அவிழ்ந்தது போல் பிரிந்திருந்த இந்திய வம்சாவளியினரனைவருக்கும் ஒரு ஸ்தாபனத்தை அமைத்துத்தந்தார். இலங்கை இந்தியர் காங்கிரஸ் என்று அழைக்கப்பட்ட அந்த ஸ்தாபனம், பின்னர் இலங்கை ஜனநாயக காங்கிரஸாகப் பெயர் மாற்றம் பெற்றது. தலைவர்களிடையே பிளவு ஏற்பட்டு, இந்த காங்கிரஸ் இரண்டாகப் பிரிந்தது. ஒவ்வொரு தோட்டத்திலும், சில குடும்பங்களிலும் பிளவுகள் ஏற்பட்டு உயிர்ச்சேதங்களும் கலவரங்களும் ஏற்பட்டதைப் பார்த்தோம். அரசியல் எதிரிகள் நகையாடினர்.

பின்னர் நல்ல வேளையாக பலரது பெருமுயற்சியின் மீது ஒற்றுமை ஏற்பட்டது. ஆனல் மீண்டும் வேற்றுமை கிளம்பி, பிளவு ஏற்படுமாயின் அது அச்சமூகத்துக்கு பெரியசாபத்தீடாகும்.

இவ்வித ஆபத்து ஏற்பட, அச்சமூகத்தின் மீது உ[illegible]யில் அபிமானமுள்ள யாரும் அனுமதிக்கக்கூடாது. அதுவும் இரு அரசாங்கங்களுக்கும் பேச்சுகள் நடக்க இருக்கும் இச் சமயத்தில் ஒற்றுமை மிக அவசியம். ஒன்று பட்டாலே உண்டு வாழ்வு!

வர்த்தக

# குமாஸ்தாக்களுக்கு போனஸ் தேசிய நலனைப் பாதிக்கும்

கொழும்பு, ஞாயிறு

வர்த்தக ஸ்தாபனங்களில் கடமையாற்றும் குமாஸ்தாக்களுக்கு போனஸ் வழங்குவது தேசிய நலனைப் பாதிப்பதாக இருக்குமென அரசாங்கம் கருதியுள்ளது.

ஒரு பகுதியினருக்கு இவ்விதம் சம்பளம் அதிகமாக வழங்குவதால் சம்பள நிர்ணயத்தை அது மாற்றியமைப்பதாக இருக்குமென்றும் வங்கி குமாஸ்தாக்கள், துறைமுக ஊழியர், அரசாங்க கார்ப்பரேஷன்களில் கடமையாற்றும் ஊழியர்கள் இவ்வித போனஸ் தமக்கு வழங்குமாறு கோர இது வழிவகுக்குமென்பது அரசாங்கத்தின் கருத்து. எனவே, தொழில் மந்திரி திரு சரத் விஜய சிங்கியிடம் வர்த்தக ஸ்தாபனங்களின் முதலாளிகளுடனும் ஊழியர்களுடனும் இது சம்பந்தமாகப் பேச்சுவார்த்தைகள் நடத்துமாறு அரசாங்கம் பணித்துள்ளது.

தனிப்பட்ட ஸ்தாபனங்களிலிருந்து அரசாங்கம் பெறும் வரியும் இவ்விதம் ஊழியர்களுக்கு போனஸ் வழங்குவதால் குறைந்துவிடலாம் எனவும் அரசாங்கம் நம்புகிறது.

இந்த வரிப்பணம் குறைந்துவிட்டால் தேசிய அபிவிருத்திக்கு வேண்டிய வருமானம் குறைந்துவிடும் எனவும் அரசாங்கத்துக்கு தெரியப்படுத்தப்பட்டுள்ளது.

# "குத்துண்டு விழுந்ததை கண்டேன்"

## மார்ட்டின் வீதி இரட்டைக்கொலை வழக்கில் சாட்சியம்

யாழ்ப்பாணம், திங்கள்

மார்ட்டின் வீதி இரட்டைக் கொலை வழக்கு சென்ற சனிக்கிழமை யாழ்ப்பாணம் நீதவான் திரு. அரசுவால்டன் முன்னிலையில் மீண்டும் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

மனுவேல்பிள்ளை அருளானந்தம் துரைராஜா, மனுவேல் பிள்ளை செல்வம் மரியதாஸ் ஆகிய இருவரையும் இவ்வருடம் செப்டம்பர் மாதம் 15ந் திகதி கத்தியால் குத்திக் கொலை செய்ததாக யாழ்ப்பாணம் தபால் நிலையத்தைச் சேர்ந்த, தந்தி சேவகரான 'சிம்ப்ளி' என்றழைக்கப்படும் சின்னத்துரை குணரத்தினம் மீது குற்றம் சாட்டி யாழ்ப்பாணம் பொலிசைச் சேர்ந்த இன்ஸ்பெக்டர் திரு. எம். வல்லிபுரத்தினால் இவ்வழக்குத் தொடரப்பட்டுள்ளது.

திரு. ஆர். விசுவநாதனுடன் திரு. சாம் ஏ. சபாபதி எதிரியின் சார்பில் ஆஜரானார்.

பட்ரிக் தம்பிராஜா சாட்சியமளிக்கையில் பின்வருமாறு கூறினார்:-

### எனது மைத்துனர்கள்

இறந்தவர்களிருவரும் எனது மைத்துனர்கள். அவர்களின் சகோதரியைத்தான் நான் மணந்து கொண்டேன். சென்ற மாதம் 15ந் திகதி மார்ட்டின் வீதி ஒழுங்கையில் தம்பி என்றவரின் மரணச் சடங்கு நடைபெற்றது. நான் அதற்குச் சென்றிருந்தேன். அங்கிருந்து அந்தோனிப்பிள்ளையுடன் மார்ட்டின் வீதி வழியாகத் திரும்பி வந்துகொண்டிருந்தேன். மார்ட்டின் வீதி சந்தியில் ஜனத்திரள் நின்றதை நான் பார்த்தேன். நான் அங்கு சென்று பார்த்தபோது செல்வமும் சிம்ப்ளியும் வாக்கு வாதம் செய்து கொணடிருப்பதைக் கண்டேன். நான் செல்வத்துடன் பேசுவதில்லை. வீண் குழப்பத்தை உண்டாக்காமல் வீட்டுக்குப் போகும்படி சிம்ப்ளி என்ற குணரத்தினத்திடம் கூறினேன். சிம்ப்ளியை அவரது வீட்டு வாசல் வரை கொண்டு போய் தள்ளி விட்டேன். சிம்ப்ளி வேலியைத் தாண்டி ஓடிவந்து செல்வத்துக்கு சவால் விட்டார். நான் மீண்டும் சிம்ப்ளியை அவரது வீட்டு வாசல்வரை கொண்டு போய் உள்ளே போகும்படி கூறினேன். சிம்ப்ளி மீண்டும் ஓடிப் போய் கையில் வைத்திருந்ததினால் செல்வத்தைக் குத்தினார். செல்வம் உடனேயே நிலத்தில் வீழ்ந்தார். அவரது தாயாரும், சகோதரி பாக்கியமும் அங்கு நின்றனர்.

### 'குத்திப்போட்டான்' என்று கத்தினர்

"குத்திப்போட்டான்" என்று அன்னம்மா கத்தினர். நான் உடனே சவரிமுத்துவின் வீட்டுக்கு ஓடினேன். துரைராஜாவையும் யாரோ குத்திவிட்டதாகவும் சத்தம் கேட்டது. நான் திரும்பிப் பார்த்தேன். செல்வமும் துரைராஜாவும் இரத்தம் வழிந்தோட நிலத்தில் கிடந்தனர். பொலிஸ் 'ஜீப்'வந்து இருவரையும், ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் சென்றது.

டி. எம். அந்தோனியும் சாட்சியமளித்தபின் மேல் விசாரணை நவம்பர் மாதம் 11ந் திகதிவரை ஒத்தி வைக்கப்பட்டது.

---

## மிகப்பெரிய ரொக்கட் அமெரிக்கா அனுப்பியது

வாஷிங்டன், அக். 29

உலகிலேயே அதிக சக்தி வாய்ந்ததெனக் கருதப்படும் 'ரொக்கட்' ஒன்றை அமெரிக்கா இன்று கேப்கனவராலிலிருந்து வானவெளிக்கு அனுப்பியது.

---

## மீண்டும் கோரிக்கை

டோக்கியோ, அக். 29

உத்தேச 5 கோடி தொன் குண்டுப்பரீட்சையை நடத்த வேண்டாமென்று ஜப்பான் பிரதமர் திரு. இக்கேடா சோவியத்யூனியனை மீண்டும் கேட்டுள்ளார்.

---

## அமெரிக்கா குற்றச்சாட்டு

வாஷிங்டன், அக். 29

பெர்லின் சம்பந்தமான நான்கு அரசுகள் உடன்படிக்கையை கிழக்கு ஜெர்மனி மீறுவதற்கு சோவியத் யூனியனும் ஆதரவளித்து வருவதாக அமெரிக்கா குற்றம் சாட்டியுள்ளது.

---

## புதிய நீர்ப்பாசன திட்டம் பிரதமர் திறந்து வைத்தார்

கொழும்பு, ஞாயிறு

கிருலைக்குச் சமீபத்தில் நீர்ப்பாசனத் திட்டம் ஒன்றை பிரதமர் ஸ்ரீமதி பண்டாரநாயகா திறந்து வைத்தார். இத்திட்டத்திற்கு இரண்டரைக் கோடி ரூபாய் செலவாகும் என்றும், 12,500 ஏக்கர் நிலம் நீர்ப்பாசனத்துக்குக் கொண்டுவரப்படும் என்றும் அறிவிக்கப்படுகிறது. பிரதமருடன் காணி மந்திரி திரு. ஸி. பி. டி' சில்வா நீதிமந்திரி திரு. சாம். பி. ஸி. பெர்னன்டோ, மந்திரி கலுகல்லை ஆகியோரும் இவ் வைபவத்தில் பங்குபற்றினர்.

## விஷக்கடி வைத்தியருக்கு

### மாநகரசபை அழைப்பு

யாழ்ப்பாணம், திங்கள்

சொட்டடி நமசிவாய வித்தியாசாலை ஆசிரியரும் பரம்பரையாக விஷகடி வைத்தியத்தில் பெயர் பெற்று விளங்கிய குடும்பத்தில் பிறந்தவரும் பாம்புக்கடி வைத்தியத்தில் நிபுணராக அரசாங்கத்தினரால் பதிவு செய்யப்பெற்றவருமான திரு. க. சிற்றம்பலம் யாழ்ப்பாண மாநகரசபையினரால் நடாத்தப்படும் இலவச விஷகடி வைத்திய சேவைக்கு அழைக்கப்பட்டுள்ளார்.

திரு. க. சிற்றம்பலம் அதற்கு இணங்கியுள்ளார். இதுவரை இவரின் இலவச விஷகடி வைத்தியத்தால் பலர் குணமடைந்துள்ளார்கள் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

---

## கட்டுப்பாடு சட்டத்தை மீறிய வர்த்தகர்கள்

### மூவருக்கு அபராதம்

யாழ்ப்பாணம், திங்கள்

உணவுக்கட்டுப்பாட்டுச் சட்டத்தை மீறியதற்காக 8 பேருக்கு அரசாங்க அதிபர் என்ற முறையில் இணைப்பு அதிகாரி லெப்டினன்ட் கேர்னல் ஏ. ஆர். உடுகம தண்டனை விதித்தார். 3 பாண்தயாரிப்பாளர் பாண்விலையை கட்டுப்பாட்டுவிலைக்குமேல் 4 சதம் அதிகமாக விற்றதாய்க் குற்றஞ் சாட்டப்பட்டனர். இருவருக்கு தலா 200 ரூபாய் அபராதமும் மற்றவருக்கு 50 ரூபாய் அபராதமும் விதிக்கப்பட்டது. கட்டுப்பாட்டு விலைபற்றிய ஜாபிதாவைத் தங்கள் கடைக்கிமுன் தொங்கவிடவில்லையென 5 வியாபாரிகள் மீது குற்றச் சாட்டு இவர்கள் எச்சரித்து விடுதலை செய்யப்பட்டனர்.

---

## ஸ்தல ஸ்தாபன மகாநாடு

வவுனியா, ஞாயிறு

மன்னார், வவுனியா ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த ஸ்தல ஸ்தாபனத் தலைவர்களையும், குமாஸ்தாக்களையும் கொண்ட ஒரு மகாநாடு வவுனியா அரசாங்க அதிபர் திரு. எச். எஸ். வனசிங்க தலைமையில் நடைபெற்றது.

வவுனியா மாவட்ட சங்கத் தலைவர் திரு. ஏ. சின்னப்பு, திரு. வி. ஸி. சண்முகம், திரு. டி. மூத்தையா, திரு. எம். மஜீத், திரு. டி. ராஜதுரை, திரு. ஏ. பொன்னையா ஆகியோர் கிராம அபிவிருத்தி பற்றி வற்புறுத்திப் பேசினர்.

---

## ஸ்டாலின் எதிர்ப்பு ஆர்ப்பாட்டம்!

மாஸ்கோ, அக். 29

ஸ்டாலின் கால அடக்குமுறையில் மாண்டவர்களுக்குநினைவுச் சின்னம் எழுப்பவேண்டுமென்று சோவியத் பிரதமர் குருஷ்சேவ் யோசனை கூறியுள்ளார்.

மாஸ்கோவில் செஞ்சதுக்கத்தில் லெனின் சடலம் புதைக்கப்பட்ட இடத்துக்கு அருகில் புதைக்கப்பட்டுள்ள ஸ்டாலினின் சடலத்தை அங்கிருந்து அப்புறப்படுத்திவிடவேண்டுமெனக் கோரி மாஸ்கோவில் மாணவர் ஆர்ப்பாட்டம் நடத்தியதாக ஒரு செய்தி தெரிவிக்கிறது.

---

புதுடில்லி, அக். 27

"இந்தியப் பிரதமர் திரு. நேருவும் அமெரிக்க அதிபர் திரு. கென்னடியும் அடுத்த மாத ஆரம்பத்தில் சந்தித்து நடத்தவிருக்கும் பேச்சுவார்த்தைகள் மிகவும் உபயோகமானதாக இருக்கும்" என்று இந்தியாவிலுள்ள அமெரிக்க ஸ்தானிகர் டாக்டர் கல்பிரய்த் இன்று வாஷிங்டனுக்குப் புறப்பட்டுச் செல்லும்பொழுது கூறினர்.

# வேகமாக வந்த லொறிக்கு வாலிபர் ஒருவர் பலி

## சாவகச்சேரியில் சம்பவம்; சாரதிக்கு விளக்க மறியல்

யாழ்ப்பாணம். ஞாயிறு

வேகமாக வந்த லொறியொன்று சைக்கிளில் சென்ற வாலிபர் ஒருவரையும் சைக்கிளையும் தனக்கு இரையாக்கிக் கொண்ட பரிதாப சம்பவம் ஒன்று சாவகச்சேரியில் நடைபெற்றிருக்கிறது. சரசாலை தெற்கைச் சேர்ந்த சுப்பிரமணியம் தர்மலிங்கம் என்ற 29 வயதுடைய வாலிபர் ஒருவர் லொறியொன்றினால் மோதப்பட்டு யாழ்ப்பாணம் பெரியாஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்ட சிலமணி நேரத்துக்குள் மரணமானார். இச்சம்பவம் சனிக்கிழமை மாலை சாவகச்சேரி சந்தைக்கு அருகாமையில் நடைபெற்றது இறந்த வாலிபர் ஓர் வியாபாரியெனத் தெரிகிறது.

இதுசம்பந்தமாக திடீர் மரணவிசாரணை அதிகாரி திரு எஸ். கனகரத்தினம் மரண விசாரணை நடத்தினார்.

சாவகச்சேரி வியாபாரியான எஸ். சிவபாலசுந்தரம் சாட்சியமளிக்கையில் கூறியதாவது:-

"நான் சம்பவம் நடைபெற்றபோது எனது கடையில் இருந்தேன். எதிரியினால் ஓட்டப்பட்டுவந்த லொறி வேகமாகச் சென்றுகொண்டிருந்தது. சாவகச்சேரி சந்தியைக் கடந்துசெல்லும்போது சந்தையை நோக்கி சைக்கிளில் வந்துகொண்டிருந்த அந்த வாலிபருடன் லொறி மோதிக்கொண்டது. அவர் உடனே கீழே விழுந்துவிட்டார். அவருக்கும் சைக்கிளுக்கும் மேலால் அந்த லொறி ஏறிச்சென்றது.

டாக்டர் அருமைநாயகம் பிரேத பரிசோதனை நடத்தினார்.

சாவகச்சேரி பொலிஸ் இன்ஸ்பெக்டர் திரு. டி. எஸ். மாசோ சந்தேக நபரை ஆஜர் செய்தார்.

சந்தேகத்தின் மீது லொறிச் சாரதியான கோப்பாய்தெற்கு செல்லத்தம்பி மாசிலாமணியை நவம்பர்மாதம் முதலாம்திகதி சாவகச்சேரி மாஜிஸ்டிரேட் முன்னிலையில் ஆஜர் செய்யுமாறும் அதுவரை ரிமாண்டில் வைக்குமாறும் திடீர் மரண விசாரணை அதிகாரி உத்தரவிட்டார்.

# தலைவரை போட்டியின்றி தெரிவு செய்ய முயற்சி

## வல்வெட்டித்துறை பட்டினசபை தேர்தல் ஏற்பாடு

யாழ்ப்பாணம், திங்கள்

வல்வெட்டித்துறை பட்டின சபையின் தற்போதைய தலைவரான திரு. சபாரத்தினத்தையும், அங்கத்தவரான திரு. நாகரத்தினத்தையும் அண்மையில் நடைபெறவிருக்கும் பட்டின சபைத் தேர்தலில் போட்டியின்றித் தெரிவு செய்வதற்கான முயற்சியில் அவ்வட்டாரங்களின் வாக்காளர்களும் வல்வெட்டித்துறையைச் சேர்ந்த பிரமுகர்களும் ஈடுபட்டிருக்கிறார்களென நம்பிக்கையான வட்டாரங்களிலிருந்து தகவல் கிடைத்துள்ளது.

இப்பட்டின சபையின் தேர்தல் நியமனம் நவம்பர் மாதம் முதலாம் திகதியென அறிவிக்கப்பட்டுள்ளது.

இத்தேர்தலைப் பின்போடுமாறு பருத்தித்துறை எம். பி. யான திரு. கே. துரைரத்தினம் ஸ்தலஸ்தாபன அமைச்சரைக் கேட்டிருந்தார். அமைச்சரை அவர் நேரடியாகச் சந்தித்து எடுத்துரைத்திருப்பதாகத் தெரிகிறது.

30 ஸ்தலஸ்தாபன சபைகளின் தேர்தல்கள் நடைபெறவிருப்பதாகவும் இந்த பட்டின சபையொன்றின் தேர்தலைப் பின்போடுவதால் மற்றைய தேர்தல்களும் பாதிக்கப்படலாமெனவும் ஆகையால் தேர்தலை ஒத்திப்போட முடியாதெனவும் அமைச்சர் திரு. மகாநாமசமரவீரா தெரிவித்துள்ளார்.

அமைச்சரின் இந்த முடிவைத் தொடர்ந்தே மேற்படி இருவரையும் போட்டியின்றித் தெரிவு செய்ய முயற்சிகள் எடுக்கப்பட்டு வருவதாகத் தெரிகிறது.

---

## ரயில் விபத்துக்கு 18 பேர் பலி

புதுடில்லி, அக். 29

இன்று காலை சிம்லாவிலிருந்து புறப்பட்ட ஒரு ரயில் வண்டி விபத்துக்குள்ளாகியதால் 18 பேர் மாண்டதாயும் 90 பேர் காயமடைந்ததாயும் அவர்கள் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப் பட்டதாயும் அறிவிக்கப்படுகிறது.

---

## 3-ம் வகுப்பிலிருந்து ஆங்கிலம்

### தென்ராஜய கல்வி மந்திரிகள் தீர்மானம்

ஹைதரபாத், அக். 29

மூன்றும் வகுப்பிலிருந்து குழந்தைகளுக்கு ஆங்கிலம் போதிக்கப்பட வேண்டுமென்றும் இதற்கென தென் ராஜ்யங்களுக்கிடையில் பொதுவான பாடத்திட்டமொன்று உருவாக்கப்பட வேண்டுமென்றும் தமிழ்நாடு, கேரளம், ஆந்திரம், கன்னடம் ஆகிய நான்கு ராஜ்யங்களின் கல்வி மந்திரிகளின் மகாநாட்டில் தீர்மானிக்கப்பட்டது.

---

## ரஷ்யாவின் அசுரகுண்டு வெடித்தது?

பாரிஸ், அக். 29

ரஷ்யாவின் மிகப் பெரும் அணுக்குண்டு வீச்சு ஒன்று பாரிஸில் இன்று பதிவாகியதாய் அறிவிக்கப்பட்டது. சமீபத்தில்ரஷ்யா வீசியராட்சஸ குண்டைவிட அதிகசக்திவாய்ந்ததாக இது இருந்ததாய் கூறப்பட்டது. ஆனால் இது பற்றி வேறு தகவல்கள் எதுவும் தெரியவில்லை.

## அரபு லீகில் சிரியா

கெய்ரோ, அக். 29

அரபு லீக் சபையில் சிரியா மீண்டும் ஏகமனதாக அங்கநாடாகச் சேர்த்துக்கொள்ளப்பட்டது.

---

## இன்று பண்டாரநாயகா கொலை வழக்கு அப்பீல்

கொழும்பு, ஞாயிறு

பண்டாரநாயகா கொலை வழக்கு அப்பீல் நாளை ஆரம்பமாகும்.

---

## ஜப்பான் வெள்ளத்தில் 71 பேர் பலி

டோக்கியோ, அக். 29

ஜப்பானில் ஏற்பட்ட பெரு வெள்ளத்தின் காரணமாக 71 பேர் மாண்டனர். 4200 பேர் வீடிழந்தனர்.

## காண்டீபன் சலேஞ்கப் போட்டி

மாவிட்டபுரம், ஞாயிறு

மாவிட்டபுரம் யூனைடெட் விளையாட்டுக் கழகத்தினரால் வருடந்தோறும் நடாத்தப்படும் "காண்டீபன் சலெஞ்கப் கைப்பந்தாட்டப் போட்டி" சித்திரையில் நடாத்தப்படாமல் காலவரையின்றி ஒத்திபோடப்பட்டது. தற்போது காங்கேசன்துறை ரேயல் கிளப் நடாத்தும் கைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டிகள் முடிவுற்றதும் இக் கைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியை நடாத்துவதெனவும், இதிற் சேரவிரும்பும் கோஷ்டிகள், காரியதரிசி யூனைடெட் விளையாட்டுக் கழகம்" என்ற விலாசத்திற்கு எழுதி விபரங்கள் பெற வேண்டுமெனவும் முடிவு செய்யப்பட்டிருக்கிறது.

---

## கிராமசபைக் கூட்டம்

அல்லைப்பிட்டி, ஞாயிறு

அல்லைப்பிட்டி கிராமசபைக் கூட்டம் தலைவர் திரு. க. கைலாசபிள்ளை ஜே. பி. தலைமையில் நடைபெற்றது. இக் கூட்டத்தில் சென்ற வருட வரவு செலவுகள் சமர்ப்பிக்கப்பட்டது.

## தண்ணீரூற்று - முள்ளியவளை வெற்றி

முள்ளியவளை, சனி

முல்லைத்தீவுத் தெரிவுக் குழுவுக்கும் தண்ணீரூற்று - முள்ளியவளைத் தெரிவிக் குழுவுக்குமிடையில் இங்குள்ள வித்தியானந்தக் கல்லூரி விளையாட்டுத் திடலில் நடைபெற்ற சிநேகபூர்வமான உதைபந்தாட்டப் போட்டியில் தண்ணீரூற்று - முள்ளியவளைக் குழு, 1—0 கோலால் வெற்றிபெற்றனர்.

உடற்பயிற்சி ஆசிரியர் திரு. க. சிறீதரன் மத்தியஸ்தராகக் கடமையாற்றினர்.

---

## கல்லூரிக் கோஷ்டியை ஜெயித்த ச. ச. நிலையக் கோஷ்டி

யாழ்ப்பாணம், வெள்ளி

யாழ்ப்பாண கொக்குவில் இந்துக்கல்லூரிக்கும் வண்ணர் பண்ணை ஐயனர் கோவிலடி சனசமூக நிலையத்திற்கும் இடையே கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற உதைபந்தாட்டப் போட்டியில் கொக்குவில் இந்துக்கல்லூரிக் கோஷ்டிக்கு 1 கோலும் வண்ணர் பண்ணை ஐயனர் கோவில் சனசமூக நிலையக் கோஷ்டி 3 கோல்களையும் போட்டு 2 கோல்களால் வெற்றி ஈட்டியது.

## ஸ்ரீ முருகன் வெற்றி

வேலணை, ஞாயிறு

வேலணை ஸ்ரீமுருகன் வாசிகசாலைக் கோஷ்டியினருக்கும் கலைமகள் வாசிகசாலைக் கோஷ்டியினருக்கும் இடையே வேலணைக் கடற்கரை மைதானத்தில் நடைபெற்ற உதைபந்தாட்டப் போட்டியில் ஸ்ரீ முருகன் வாசிகசாலைக் கோஷ்டி 2—1 கோல்களால் வெற்றியீட்டியது. திரு. நற்குணசிங்கம் மத்தியஸ்தராகக் கடமையாற்றினர்.

---

## வேலணை கல்லூரி வெற்றி

வேலணை, ஞாயிறு

கல்வி இலாகாவின் வடபகுதி ஊழியர்கள் கோஷ்டிக்கும் வேலணை மத்திய கல்லூரி கோஷ்டிக்கும் இடையே நடைபெற்ற சிநேகபூர்வமான உதைபந்தாட்டப் போட்டியில் வேலணை மத்திய கல்லூரிக் கோஷ்டி 3—0 கோல்களால் வெற்றியீட்டியது.

## வேலணை மத்திய கல்லூரி வெற்றி

ஊர்க்காவற்றுறை, சனி

வேலணை மத்திய கல்லூரி மாணவர் கோஷ்டிக்கும், யாழ்ப்பாணம் 'வித்தியாபகுதி' விளையாட்டுக் கிளப் கோஷ்டிக்குமிடையே அண்மையில நடைபெற்ற சிநேகபூர்வமான உதைப்பந்தாட்டப் போட்டியில் வேலணை மத்திய கல்லூரி மாணவர் கோஷ்டி வெற்றி பெற்றது.

வேலணை மத்திய கல்லூரி விளையாட்டு மைதானத்தில் நடைபெற்ற இப் போட்டிக்கு உடற்பயிற்சி ஆசிரியர் திரு. தியாகராசா மத்தியஸ்தராகக் கடமையாற்றினர்.

---

## தொழிற்சாலை கோஷ்டி வெற்றி

காங்கேசன்துறை, சனி

மாவிட்டபுரம் டொலர் அலுமினிய தொழிற்சாலை விளையாட்டு வீரர்களுக்கும் மாவை கொல்லங்கலட்டி விளையாட்டு வீரர்களுக்குமிடையே நடந்த உதைபந்தாட்டப் போட்டியில் அலுமினியம் தொழிற்சாலை விளையாட்டுக் கோஷ்டி 3-2 கோல்களால் வெற்றியீட்டியது.

போட்டி போயிட்டி இராணி விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது. திரு. ரி. செல்வரத்தினம் மத்தியஸ்தராகக் கடமையாற்றினர்.

---

## மாவை ஜனசமூகநிலைய நிர்வாகிகள்

மாவிட்டபுரம், சனி

மாவை கொல்லங்கலட்டி சனசமூக நிலையத்தின் வருடாந்த பொதுக் கூட்டம் திரு. வி. சரவணமுத்து தலைமையில் நடைபெற்ற போது 1961—62-ம் ஆண்டு நிருவாகிகளாக பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர் திரு. வி. சரவணமுத்து · துணைத்தலைவர்கள்:- திரு. இ. துரைச்சாமி, திரு. ஆர். கிருஷ்ணசாமி, திரு. வி. சிற்றம்பலம். பொதுக் காரியதரிசி திரு. ரி. செல்வரத்தினம். நிருவாக காரியதரிசி திரு. எஸ். விமலராஜா. பொருளாளர் திரு. எஸ். நடராசா. துணைப் பொருளாளர் திரு. எஸ். பரமசிவம். கணக்குப் பரிசோதகர் திரு. எஸ். கனகநாயகம். திருவாளர்கள் என். ஜீவேஸ்வரன், எஸ். மாணிக்கவாசகர், வி. வன்னியசிங்கம், எஸ். சிவமகாராஜா, ஆர். சன்முகரத்தினம், எஸ். முருகையா, எஸ். செல்லத்துரை ஆகியோர்நிருவாகசபைஅங்கத்தவர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

---

## அஷ்டகிரக பரிகார ஆராதனை

ஊர்காவற்றுறை, ஞாயிறு

எதிர்வரும் பெப்ரவரி மாதம் மூன்ருந் திகதி சம்பவிக்கும் அஷ்டகிரக கூடத்தால் ஏற்படும் தீயபலன்களுக்குப் பரிகாரம் தேடும் பொருட்டு நாரந்தனை தான் தோன்றி ஸ்ரீமனோன்மணி ஆலயத்தில்ஜனவரி 27-ந் தேதி தொடக்கம் பெப்ரவரி 5-ந் தேதி வரை நவக்கிரகபூசை, ஹோமம் லட்சார்ச்சனை ஆகியவற்றை நடத்துவதற்கு நாரந்தனை 'சைவ மாகாசபை' தீர்மானித்துள்ளது.

---

## அமெரிக்கன் மிஷன் வெற்றி

உடுப்பிட்டி, வெள்ளி

உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரிக்கும், கரவெட்டி விக்னேஸ்வரக் கல்லூரிக்கு மிடையில் நடந்த உதைபந்தாட்டப்போட்டியில் அமெரிக்கன் மிஷன், விக்னேஸ்வராவை 2-1 கோல்களால் தோற்கடித்தது. திரு. எம். இராமகிருஷ்ணன் மத்தியஸ்தம் வகித்தார்.

## தந்தி (ஏ) மாற்றம்!

மாவிட்டபுரம், சனி

மல்லாகம் நீதிமன்றத்தில் கடமையாற்றும் லிகிதர் ஒருவர் உரலபொல என்னுமிடத்திலுள்ள தமதுசொந்தக்காரருக்கு அனுப்பிய தந்தியில் தாம் ஞாயிற்றுக்கிழமை யாழ்தேவியில் வருவதாகவும் பொல்காவலை ரயில் ஸ்தானத்தில் சந்திக்கும்படியும் கேட்டிருந்தார்.

இத்தந்தி விநியோகஞ் செய்யப்பட்டிருந்த போது "திங்கட்கிழமை யாழ்தேவியில் வருகிறேன். பொல்காவலைப் புகையிரத நிலையத்தில் சந்திக்கவும்" எனக் குறிப்பிடப்பட்டிருந்தது.

இந்த லிகிதர் (திரு. துரைசிங்கம்) ஞாயிற்றுக்கிழமை யாழ்தேவியில் சென்று பொல்காவலை நிலயத்தில் இறங்கிய போது அவரை அழைத்துச் செல்வதற்கு அங்கு ஒருவரும் வராததினுல் மிகவும் ஏமாற்றமடைந்தார். அன்றிரவை பொல்காவலைப் புகையிரத நிலயத்தில் கழித்துவிட்டு மறுநாட் காலை உரலபொலவுக்குச் சென்ருர்.

---

## 'கைக்கெட்டியும் . . !'

முள்ளியவளை, சனி

இங்குள்ள அரசினர் பாடசாலைகளுக்குரிய மாதச் சம்பளம் 20, 21-ஆம் திகதிகளிற் கிடைக்கவேண்டியது, இம்மாதம் 25-ம் திகதிதான் கிடைத்தது.

அதையும், இங்குள்ள உபதபாற் கந்தோரில் உடனே பணமாக்கமுடியாது திண்டாடவேண்டியேற்பட்டது!

காரணம் அப்போது, முள்ளியவளை, முல்லைத்தீவு, வவுனியாத் தபாற் கந்தோர்களில் பணம் இல்லை எனத் தெரிவிக்கப்பட்டது!

---

## உலகச் சிறுவர் தின கட்டுரைப்போட்டி

உடுப்பிட்டி, வெள்ளி

அகில இலங்கை சிறுவர் இளைஞர் நலன்புரி இயைபுபடுத்தும் சபை சமீபத்தில் விடுத்துள்ள ஓர் அறிக்கையில் 19 வயதுக்கு மேற்பட்டோருக்கும், அவ்வயதிற்குக் கீழ்ப்பட்டோருக்குமெனக் கட்டுரைப் போட்டிகள் ஒழுங்குசெய்திருப்பதாகவும், இவற்றில் முதற் பட்டியலில் வெற்றிபெறுவோருக்கு ஒவ்வொன்றும் ரூபா 150 கொண்ட 3 பரிசுகளும், மற்றையோருக்கு ரூபா 75 கொண்ட 3 பரிசுகளும் வழங்கவிருப்பதாகவும் தெரிவித்துள்ளது.

கட்டுரைத்தேதி முடிவு டிசம்பர் 2-ம் திகதியென்றும் தெரிகிறது.

---

## தேவரையாளி தோல்வி

உடுப்பிட்டி. வெள்ளி

கடந்த 1959, 1960 ம் ஆண்டுகளில் வடமராட்சி ஆசிரியர் சங்கத்தின் ஆதரவில் நடந்து வந்த உதைபந்தாட்டச்சுற்றுப் போட்டிகளில் தொடர்ந்து வெற்றியீட்டி, வெற்றிக்கேடயத்தைப் பெற்றுவந்த வதிரி தேவரையாளி இந்துக்கல்லூரி நேற்றுமுன் தினம், பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரிக் கோஷ்டியினுல் தோற்கடிக்கப்பட்டது. ஹாட்லிக்கல்லூரி 2 கோல்களும், தேவரையாளி 1 கோலும் போட்டன.

அனேகமாக இவ்வருட வெற்றிக்கேடயம் ஹாட்லிக் கல்லூரிக்கே சேருமென நம்பப்படுகிறது.

---

## ஆசிரியருக்கு பிரிவுபசாரம்

பளை, வெள்ளி

பளை அரசினர் பாடசாலை ஆசிரியர்களாகக் கடமையாற்றிய திரு. கா. செல்லையாவும், திரு. ஏ. அந்தோனிப்பிள்ளையும் மாற்றம் பெற்று செல்வதை முன்னிட்டு அப்பாடசாலை ஆசிரியர்களாலும் மாணவர்களாலும் அவர்களுக்கு ஒரு பிரிவுபசாரம் அளிக்கப்பட்டது.


# தாயும் மகளும் நவ நாகரீகமாகத் திகழ உகந்தது ஜம்பிங் பிஷ்

## பிரிண்டட் பேப்ரிக்

தாயும் மகளும் நவநாகரீகமாக உடுத்துவதற்கு இந்தப் புதிய பேப்ரிக்குகளை நிச்சயம் நீங்கள் தேர்ந்தெடுப்பீர்கள். இந்த அச்சடி கேம்பிரிக்குகள் பிரகாசமானவை, கனமில்லாதவை, நீடிய காலம் உழைப்பவை. குறைந்த விலையில் கிடைப்பவை. பல கலர்களிலும், பல்வேறு டிசைன்களிலும் கிடைப்பவை. இன்றே ஜம்பிங் பிஷ் பேப்ரிக்குகளில் நீங்களும் தைத்து உடுத்துங்கள் —இது சிக்கன வாழ்விற்கு ஸி. டப்ளியூ. ஈ. அளிக்கும் அன்பளிப்பு.



ஏக விநியோகஸ்தர்கள்:

சி. டப்ளியூ ஈ

கிடைக்குமிடங்கள்: சி. டப்ளியூ, ஈ. இலாகா, ஸ்டோர், கோட்டை, கொழும்பு மக்கலம் ரோட், மெயின்வீதி, புறக்கோட்டை, மருதானை மற்றும் வெளியூர்கள்.

ஞாபகமிருக்கட்டும்- CWE ஸி. டப்ளியூ- ஈ. தரத்திலும் ரகத்திலும்

உயர்ந்த பொருட்களையே உங்களுக்கு அளிக்கின்றது

## தாக்கியதாக வழக்கு

மாவிட்டபுரம், வியாழன்

வசராவிளாவைச் சேர்ந்த கந்தையாசிதம்பரப்பிள்ளை,நாகமுத்துசுப்பிரமணியம்,மூத்ததம்பி நவரத்தினம், கந்தையா கந்தசாமி, தம்பர் குணரத்தினம், செல்லையா நாகேந்திரம் ஆகிய அறுவர் மேலும் காங்கேசன் துறை பொலிஸ் உத்தியோகஸ்தரான எம். டி. குமாரதிஸ்ஸா, பி. எப். பெரேரா ஆகிய இருவரையும் தாக்கிக் காயம் உண்டுபண்ணியதாகக் குற்றம் சாட்டி காங்கேசன் துறை பொலிசாரால் மல்லாகம் நீதிபதி திரு. வெஸ்லி. டி. தாமோதரம் முன்னிலையில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கில் எதிரிகளை பழைய பிணையில் செல்லும்படியும் (தலா ரூபா 750) 9-11-61ல் விசாரணைக்கு ஆயத்தமாய் வரும்படியும் நீதிபதி கட்டளையிட்டார்.

## பெண்ணை பொல்லால் தாக்கி காயம் விளைவித்தாராம்

மாவிட்டபுரம், வியாழன்

தையிட்டியைச் சேர்ந்த கிட்ணன் இராசனின் மனைவி இராணி என்பவரை பொல்லால் தாக்கி படுகாயம் விளைவித்ததாக அதே ஊரைச் சேர்ந்த வல்லி அழகன் என்பவர் மேல் காங்கேசன்துறை பொலிசாரால் குற்றம் சாட்டி மல்லாகம் நீதிபதி திரு. வெஸ்லி டி. தாமோதரம் முன்னிலையில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கில் எதிரியை ரூபா 500 பிணையில் செல்லும்படியும் 1-12-61-ம் திகதி கோர்ட்டில் ஆஜராகும் படியும் நீதிபதி கட்டளையிட்டார்.

## சர்வதேச புகைப்படக் காட்சி

கொழும்பு, வெள்ளி

இலங்கையில் நடைபெற இருக்கும் எட்டாவது சர்வதேச புகைப்படக் காட்சிக்கு 30 நாடுகளிலிருந்து 600 விண்ணப்பங்கள் அனுப்பப்பட்டுள்ளன.

பிரிட்டன், ஐக்கிய அமெரிக்க செக்கோஸ்லவேக்கியா, காங்காங், மலேயா, இந்தியா, யூக்கோஸ்லேவியா, மெக்ஸிக்கா, கம்போடியா ஆகிய நாடுகளிலிருந்து பலர் புகைப்படக் காட்சிக்கு வைப்பதற்காக புகைப்படங்களை அனுப்பியுள்ளனர்.

லயனல்வெண்ட் தியேட்டரில் நடைபெற இருக்கும் இக்கண்காட்சியை உள்நாட்டுக் கைத்தொழில் கலாச்சார மந்திரி திரு. மைத்திரிபால சேனநாயக்கா நவம்பர் 17-ந் திகதி திறந்து வைப்பார்,

## தனிப்பட்ட முறையில் தொழில் நடத்த டாக்டர்களுக்கு தடை

கொழும்பு, வெள்ளி

வைத்திய நிபுணர்கள் தனிப்பட்ட முறையில் வைத்திய தொழில் நடத்துவதை ஜனவரி முதலாம் திகதி முதல் அரசாங்கம் தடை செய்யும். சுகாதார இலாகாவுக்குத் தெரிவிக்காது இவ்விதம் தொழில் நடத்த விரும்பியவர்கள் கட்டாயமாக நவம்பர் 30-ந் திகதிக்கு முன்னர் ஓய்வு பெற வேண்டும் என சுகாதார அமைச்சின் நிரந்தரக்காரிய தரிசி திரு. எல். எஸ். பி. பெரேரா உத்தரவு பிறப்பித்துள்ளார்.


# நான் விரும்புவது நெஸ்டோமோல்ட்

அது எனக்கு எவ்வளவோ நன்மையளிக்கின்றது...




குழந்தைகள், வாலிபர், குடும்பப் பெண்கள் ஆகிய எல்லோருமே விரும்பி அருந்தும்இந்த நெடோமோல்ட் அபார நன்மை அளிக்க வல்லது. சூடானுலென்ன, ஐஸ் போன்ற குளிர்மையானுலென்ன, இழந்த சக்தியை மீட்டுத் தரவும் ஊக்கமூட்டவும் சுவை நிரம்பிய நெஸ்டோமோல்டுக்கு நிகர் எதுவுமே கிடையாது. நெஸ்டோமோல்டில் ஒரு ஆச்சர்யமென்னவென்றல், உங்களுக்கு நன்மையானவை யாவும் அதில் அடங்கியிருப்பதுதான். இத்தனைக்கும் அதன் சுவை ஒரு தனி ரகம்.

நெஸ்டோமோல்ட் ஒரு உன்னத பால் ஆகாரம். இது மோல்ட்டட் பார்லி மற்றும் கோதுமை மாவுடன் முழுப் பாற்கட்டிகளை ஒன்று சேர்த்து கவனமாகத் தயாரிக்கப்பட்ட ஒரு உற்பத்தியாகும். இதில் விட்டமின் A, B2, மற்றும் E அதோடு கல்ஸியம், மக்னீஸியம், ஆகியவற்றின் பெறுமதியான ஓர்கனிக் பொஸ்பேட்டுகள்மற்றும் ஒவ்வொரு அவுன்ஸ் பவுடருக்கும் 137 மேலதிக விட்டமின் B சத்துக்கள் உள்ளன.

உற்பத்தி செய்து உத்தரவாதமளிப்பவர்கள்

**நெஸில்ஸ்**

இலவச சாம்பிள்

இலவச நெஸ்டோமோல்ட் சாம்பிளைப் பெற உங்களது பெயர் விலாசத்தையும் அதோடு தபால் கட்டணமாக 25 சதத்திற்கு முத்திரைகளும் அனுப்பி வைக்கவும்,

நெஸில் புரோடக்ட்ஸ்
(சிலோன்) லிமிட்டெட்
த. பெ. 189,
கொழும்பு.

## நெஸ்டோமோல்ட்

விட்டமின் B அடங்கியது.


## வானெலி நிகழ்ச்சிகள்

### கொழும்பு

(செய்திகள்: காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00,இரவு 9-00)

**திங்கள் 30-10-61**

காலை 6-45 உதயகீதம், 6-50 சைவநற்சிந்தனை, 6-55 கத்தோலிக்கநற்சிந்தனை, 7-15 காலைக்கதிர், 7-30 திரை இசை, 8-00 வீணை, 8-12 இஸ்லாமிய கீதங்கள்.

பகல் 12-00 சித்திரகானம், 1-00 கதம்ப இசை.

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-15 ஒலிப்பதிவுகள், 5-45 திரை இசை, 6-15 கிராமசஞ்சிகை, 6-45 வாத்தியக்கோஷ்டி.

இரவு 7-00 நேயர்விருப்பம், 7-30 எஸ். இராமசாமிஐயர் - வீணை, 8-00 முஸ்லிம்நிகழ்ச்சி, 9-15 சவாமி சச்சிதானந்தா - பேச்சு, 9-50 டி. எஸ். மணி பாகவதர் - பாட்டு.

### திருச்சி

(செய்திகள்: காலை 7-15, பகல் 2, இரவு 7-15.)

காலை 6-45 மங்கள இசை 6-50 துதிப்பாடல்கள், 7-00 வாத்தியஇசை, 7-10 நிகழ்ச்சிக்குறிப்புகள், 7-30 எட்டயாபுரம் வி. நரசிம்மன் - பாட்டு.

பகல் 12-00 தொழிலாளர்களுக்கு 12-30 நடுத்தரப்பள்ளிகளுக்கு, 1-00 மீனாட்சி - லட்சுமி - பாட்டு, 1-30 வயலின், 1-50 குரல்இசை.

மாலை 4-45 விவிதபாரதி (கர்நாடகசங்கீதம்), 5-45 இசைப் பயிற்சி, 6-15 கிராமநிகழ்ச்சிகள்.

இரவு 7-30 இம்மாநப் பாடல், 7-35 நல்லுரை, 7-40 திரைப்படஇசை, 8-30 மீனாட்சி-லட்சுமி - பாட்டு, 9-15 இசைக்கோவை,9-30 எட்டயாபுரம் வி. நரசிம்மன் - பாட்டு.

## கமாண்டர் கதிர்காமர் சாட்சியமளிப்பார்

கொழும்ப, வெள்ளி

கடற்படையின், தனிநபர் கமிஷன்முன் அடுத்த புதன்கிழமை சாட்சியமளிப்பதற்காக ஆஜராகும்படி கமாண்டர் ராஜன் கதிர்காருக்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

சென்ற வருடம் ஆகஸ்ட் மாதத்துக்கும் அக்டோபர் மாதத்துக்மிடையில் தூரகிழக்கில் பயிற்சி பெற்று வந்த சமயத்தில் றோயல் கடற்படைக் கப்பல்களான மகாசேனுவிலும், பராக்கிரமாவிலும் கள்ளக்கடத்தல் செய்ததாகத் தொடரப்பட்ட குற்றச்சாட்டு பற்றி கமிஷன் விசாரணை செய்யும். ஓய்வு பெற்ற நீதியரசர் திரு. கே. டி. டி' சில்வா கமிஸனராகக் கடமையாற்றுவார்.

தற்காலிக வேலை நீக்கம் செய்யப்பட்ட13 உத்தியோகஸ்தர் உட்பட 28 கடற்படை உத்தியோகஸ்தர்கள் அன்று விசாரணை செய்வதற்காக ஆஜராகும்படி உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

## தேயிலை, கோப்பி பயிரிட 1000 ஏக்கர் நிலம்

கொழும்பு, வெள்ளி

காலி, மாத்தறை, இரத்தினபுரி, ஊவா பகுதிகளில் தேயிலையும் கண்டிப்பகுதியில் கோப்பியும் உற்பத்திசெய்ய காணி அபிவிருத்தி இலாகா திட்டமிட்டுள்ளது.

இதற்கென ஒவ்வொரு பகுதியிலும் 1000 ஏக்கர் நிலம் ஒதுக்கப்பட விருக்கிறது என இலாகா அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

# கலை அரங்கம்

## கலைச் சிறப்புத்தான் பெரிது; லாப நோக்கமல்ல!

### திரைப்படத் தயாரிப்பாளர்களுக்கு டாக்டர் ராதாகிருஷ்ணன் புத்திமதி

கலைச்சிறப்பைவிட லாப நோக்கம் பெரிதாகக் கருதாமல், நீதி, சுதந்திரம், சமாதானம், கண்யம் ஆகிய லட்சியங்களுக்காக திறமையையும் ஞானத்தையும் பயன்படுத்துமாறு, திரைப்படத் தொழிலில் உள்ளவர்களை உபராஷ்டிரபதி ஸ்ரீ ராதாகிருஷ்ணன் கேட்டுக் கொண்டார்.

இந்தியாவின் இரண்டாவது சர்வதேச திரைப்பட விழாவை விஞ்ஞான பவனில் துவக்கிவைக்கையிலேயே அவர் இவ்வாறு வேண்டுகோள் விடுத்தார். இந்தத் திரைப்பட விழாவில் 38 நாடுகள் பங்கு கொள்ளுகின்றன.

தகவல் இலாகா மந்திரி டாக்டர் பி. வி. கேஸ்கர் பேசுகையில், முன்பு திரைப்பட விழா நடந்த பின்னர், இந்தியப் படங்களின் தரம் உயர்ந்துள்ளது என்று குறிப்பிட்டார்.

தேசிய ஒருமைப்பாட்டையும் உலக ஒற்றுமையையும் சாதிக்கவல்ல சக்திவாய்ந்த சாதனம் திரைப்படங்கள் என்று டாக்டர் ராதாகிருஷ்ணன் துவக்க உரையில் சொன்னார். அவர் மேலும் கூறியதாவது:

"அரசியல் சூழ்நிலை உற்சாகத்தை உரைய வைப்பதாயிருக்கும் நிலைமையில், அணு யுத்தத்தின் விளிம்புக்கு உலகத்தை நெட்டிப்பிடித்துத் தள்ளுவதாக வல்லரசுகள் ஒன்றையொன்று குற்றம் சாட்டும் இந்தத் தருணத்தில், அத்தகைய யுத்தத்தில் வெற்றி காண்பதற்காக, வானத்தை இருளடையச் செய்து, வாயுமண்டலத்தை விஷமயமாக்கி, பூவுலகில் நஞ்சைப் பரப்பும் தருவாயில், உலக நாடுகளைச் சேர்ந்த பிரதிநிதிகள் இங்கு கூடியிருக்கிறீர்கள். போர் நடவடிக்கைகளுக்காக அல்ல: தேசா தேசங்களுக்கிடையில் நல்லுணர்ச்சியைப் பரப்புவதற்காகக் கூடியிருக்கிறீர்கள்."

பல்வேறு நாடுகளில் தயாரிக்கப்படும் திரைப்படங்கள் இத்தகைய சூழ்நிலையை சரி செய்யும் என்று நம்புவதாக டாக்டர் ராதாகிருஷ்ணன் கூறினார்.

திரைப்படங்களின் முக்கிய குறிக்கோள் பொழுதுபோக்கு அம்சமாக விளங்குவதுடன் கூட, மக்களிடையே அறிவை பரப்பி, அவர்களை மேம்படுத்துவதுமாகும் என்றார்.

படங்கள் பாமர ரசனையைத் திருப்திப்படுத்துவதாக இருந்துவிடக் கூடாதென்றும், அந்த ரசனையை உயர்த்தபாடுபடுவதாயிருக்க வேண்டுமென்றும் சொன்னார்.

தகவல், ஒலிபரப்பு இலாகா மந்திரி டாக்டர் பி. வி. கேஸ்கர் பேசுகையில் இத்தகைய விழாக்கள் பல்வேறு தேசங்களுக்கிடையில் நெருக்கமான உறவை ஏற்படுத்தத் துணை புரியுமென்றார். இந்தவிழாவையொட்டி போட்டிகள் நடத்தப்படவில்லையாதலால், விருதுகள் வழங்கப்படமாட்டா என்றார்.

இவ்விழாவையொட்டி டில்லியைச் சேர்ந்த 5 தியேட்டர்களில் 40 முழு நீளப்படங்கள் திரையிடப்படும்.

சாவித்திரி கணேசன், வைஜயந்திமாலா, சசிகபூர், ராஜேந்திரகுமார், பால்ராஜ் சஹானி, ராஜ்கபூர், தேவ் ஆனந்த், அசோக்குமார் முதலிய நட்சத்திரங்கள் துவக்க விழாவுக்கு வந்திருந்தனர்.

## கொஞ்சும் சலங்கை ஒலி கேட்டு...!



"கொஞ்சும் சலங்கை ஒலி கேட்டு......!" என்று சாவித்திரி (பி லீலா) பாட ஜெமினி ஜதி சொல்ல, சாரங்கபாணி மிருதங்கம் வாசிக்க, கமலா ஆனந்த நடனம் ஆடும் அழகான காட்சியை ராமன் புரடக்ஷன்ஸ் முழுநீள வர்ணப் படமான 'கொஞ்சும் சலங்கை' யில் கண்டு களிக்கலாம்.

காதிற்கினிமையான சர் நாடக ராகங்களில் அமைக்கப் பெற்ற பாட்டுக்கள் சில இப்படத்துக்கு தனிச்சிறப்பளிக்கின்றன. தமிழ் நாட்டுக்கே நிகரில்லாப் பெருமையை இப் படம் தேடித் தருமென எதிர்பார்க்கப்படுகிறது.

பிரமாதமாகவும் விறுவிறுப்புடன் கூடியதாகவும்சுமார் 17,500 அடிகளுக்குள் பல அற்புதக் காட்சிகளையும் ஆனந்த நடனங்களையும், இசை விருந்துகளையும், ஈடில்லா நடிப்பையும் உற்சாக மூட்டும் கதையையும் கொண்டதாக அமைந்திருக்கிறதாம் 'கொஞ்சும் சலங்கை'.

'இலங்கேஸ்வரன்' மனோகர் இப்படத்தில் வில்லன்!

ஐந்துவருடங்கள் அரும்பாடுபட்டு பெருந்தொகையான பணத்தைச் செலவிட்டு 'கொஞ்சும் சலங்கை' உருவாக்கப்பட்டுள்ளது.

## தியாகம்! தியாகம்!

கல்யாணப்பரிசுப் படத்தில் சரோஜாதேவி தனது காதலை விஜயகுமாரிக்காகத் தியாகம் செய்தார். 'குமுதம்' படத்தில் விஜயகுமாரி, சௌகார் ஜானகிக்காகத் தனது காதலை தியாகம் செய்கிறார். 'பாலும் பழமும்' படத்தில் சௌகார் ஜானகி, சரோஜாதேவிக்காகத் தியாகியானார்!

## மேல்நாட்டு முறையில் ரஞ்சன் ஹோட்டல்

பிரசுத்திபெற்ற கத்திச் சண்டை வீர நடிக நட்சத்திரம் ரஞ்சன், பிரமாதமாகத் திட்டமிட்டு ராயப்பேட்டையில் ஒரு அழகான கட்டிடத்தைக் கட்டி முடித்திருக்கிறார்.

கீழே கடைகள் மேலே இரண்டடுக்கு ஹோட்டல்.

ஹோட்டலின் பெயர் "ரஞ்சன் ஹோட்டல்."

மேல்நாட்டு முறையில் ஹோட்டல் அறைகள் அமைக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு அறைக்கும் 'டெலிபோன்' உண்டு!

வருவோரை இனிக்கப் பேசி வரவேற்று உபசரிக்க குமாரி லஹிதா என்றொரு அழகியை ரஞ்சன் அமர்த்தியிருக்கிறார்

### வாள்வீரர் ஒருவர்தான்

ரஞ்சன் இப்பொழுது சுமார் 15 ந்திப் படங்களில் நடித்து வருகிறார். இவைகளில் பல வர்ணப்படங்கள்

எகிப்திய ரஸிகர் ஒருவர் ரஞ்சனுக்கு ஒரு கடிதம் எழுதியுள்ளார். "டக்ளஸ் பேர்பாங்க்ஸிம் ஏரல்பிளினும் போய்விட்டார்கள். இப்பொழுது உலக மக்களின் நினைவில் இருக்கும் அஞ்சா நெஞ்சம் படைத்த வாள் வீரர் நீங்கள் ஒருவர்தான்" என்று அந்த ரஸிகரர் குறிப்பிட்டுள்ளார்.

## 'தாய்க்குத்தலைமகன்' தேவர் தயாரிப்பு

'தாய்சொல் தட்டாதே' என்ற படத்தை மிகக் குறுகிய காலத்தில் தயாரித்து முடித்த தேவர் "தாய்க்குத் தலைமகன்" என்ற படத்தை ஒருமாதத்துக்குள் தயாரித்து முடித்துவிடத் திட்டமிட்டுள்ளார்.

புரட்சி நடிகர் எம். ஜி. ஆர், சரோஜாதேவி, நடிகவேள் எம். ஆர். ராதா ஆகியோர் இப் படத்தில் நடிப்பார்களென்று தெரிகிறது.

## சாவித்திரி சுவிட்சலாந்து செல்வார்

நடிகை சாவித்திரிக்கு மூக்கில் ஒரு சதை வளர்ந்துவருகிறது. இதனால் அவர் சில சமங்களில் அவதியுறுகிறார். ஓய்வின்றி படப்பிடிப்புக்களில் ஈடுபட்டதால் இந் நோயைப் பற்றி அவர் கவனிக்கொள்ளாமலிருந்துவிட்டார்.

சுவிட்சர்லாந்தில் சத்திர சிகிச்சை செய்து சதையை அகற்றுவதற்கு சாவித்திரி யோசனை செய்துவருகிறார்.

இப்பொழுது திரையிடப்படுகிறது!

கிங்ஸ்லி (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை)

வெலிங்டன் (யாழ்ப்பாணம்) விஜயா (மட்டக்களப்பு)

திரை உலகத்திற்கே ஓர் இலக்கணம் வகுக்கும் திரை ஓவியம்



மனோஹர், தேவிகா

எல். விஜயலக்ஷ்மி, டி. ஆர். ராமச்சந்திரன்

நடித்த

எம். ஏ. வி. பிக்சர்ஸ்

பாஞ்சாலி

மனோஹரா (யாழ்ப்பாணம்)

இன்றும் நாளையும் மட்டும் காலை 10-30, பி. ப. 2-30 மெட்னிக் காட்சி.

பராசக்தி

தினசரி மாலை 6-30, இரவு 9-30 குருளு பெத்த (சிங்களம்)

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் தாபனத்தாரால் யாழ்ப்பாணம், சிவன் கோவில் மேலை வீதி, 63-ம் இல்லத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1961-ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 30-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பெற்றது.